பக்கங்கள்: 12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 27 புதன்கிழமை 11.08.2021 கதிர் 279

### இனி இது ரகசியம் அல்ல!

உள்வீட்டு அரசியல் பற்றிய ஒரு தகவலை இன்று வாசகர்களோடு பகிரலாம் என நினைக்கின்றேன். ஆனால் அதை ஒட்டி முற்கூட்டியே இரண்டு விடயங்களையும் உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதலாவது – இது பக்கம்02 »

# இலங்கையில் தொடரும் பேரவலம்; ஒரே நாளில் 118 பேர் பரிதாபச் சாவு!

## கொரோனாக் காவு மொத்த எண்ணிக்கை 5,340 ஆக உயர்வு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் 118 பேர் சாவடைந்துள்ளனர். இதுவே நாட்டில் நாள் ஒன்றில் பதிவான அதிகூடிய கொரோனா மரண எண்ணிக்கையாகும்.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 118 பேரில் 79 ஆண்களும், 39 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

30 இற்கும் 59 இற்கும் இடைப்பட்ட வயதுடைய 15 ஆண்களும் 2 பெண்களுமாக 17 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 64 ஆண்களும் 37 பெண்களுமாக 101 பேரும் இவ்வாறு சாவடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் ☞2

## 2,904 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 904 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ☞11

# சர்வதேச அழுத்தத்திலிருந்து இலங்கையை காப்பாற்ற முயற்சிக்கின்றதா கூட்டமைப்பு?

## பஸிலுடனான பேச்சு தொடர்பில் சுரேஷ் இப்படிக் கேள்வி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனான பேச்சு என்பது இலங்கையை சர்வதேச நாடுகளின் அழுத்தத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.**

**– இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.** ☞11



## யாழில் கர்ப்பிணிப் பெண் கொரோனோவால் மரணம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொரோனா வைரஸ் நோயால் உயிரிழந்துள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண் திருமணம் முடித்து ஒரு ஆண்டு. அவர் நேற்று முன்தினம் திடீரென வாந்தியெடுத்து மயக்கமடைந்து நிலத்தில் சரிந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் ☞2

## குடாநாட்டில் 24 மணிநேரத்தில் நால்வர் கொரோனோத் தொற்றால் உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்.குடாநாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 4 பேர் கொரோனாத் தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர் என்று போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும், மானிப்பாய், நவாலி மேற்கைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவரும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவருமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய கர்ப்பிணிப் பெண் ஒருவர் வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 145 ஆக உயர்வடைந்துள்ளது.

## நல்லூர் திருவிழாவுக்குச் செல்ல தடுப்பூசி அட்டை மிகவும் அவசியம்

### உற்சவ நடைமுறைகள் தொடர்பில் யாழ். மேயர் விளக்கமான அறிக்கை

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்.நல்லூர் கந்தனின் உற்சவத்துக்கு வருபவர்கள் தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பது அவசியமாகும் என்று யாழ்.மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

நல்லூர் கந்தன் உற்சவ நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர மேயர் மணிவண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் வருமாறு:-

தற்போது பரவி வரும் கொரோனா தொற்றைக் கருத்தில்கொண்டு நல்லூர் முருகப்பெருமானின் இவ்வருட ☞2

## யாழ்.மாவட்டத்தில் 48 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 48 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் 36 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் 09 பேருக்கும், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 03 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## பெற்ற தாயின் கழுத்தை அறுத்து படுகொலைசெய்த கொடூர மகன்

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி குமாரவேலியார் கிராமத்தில் தாயின் கழுத்தை அறுத்துக் கொலை செய்த மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த 65 வயதான தாயின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 40 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் இன்று ☞2

## கிளிநொச்சியில் குளவி கொட்டி உயிரிழந்த வயோதிபருக்கு கொரோனா தொற்று உறுதி

கிளிநொச்சி மாவட்டம், தர்மபுரம், குமாரசாமிபுரம் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்த வயோதிபருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

வீட்டுக்கு அருகிலுள்ள காணியில் தேன் எடுக்கச் சென்றபோதே இவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

12ஆம் கட்டை – குமாரசாமிபுரம் விசுவமடு பகுதியைச் சேர்ந்த கதிரேசு செல்வரத்தினம் (வயது 64) என்பவரே குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான பரிசோதனை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் மாதிரிகள் யாழ்.போதனா ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் சம்பந்தன் – சுமந்திரன் இணையின் செயற்போக்கை நியாயப்படுத்தும் கருத்துப் பதிவாக நீங்கள் நோக்கக் கூடாது.

ஏதோ கூட்டமைப்பில் சம்பந்தனும் சுமந்திரனும் தங்களுக்குள் விடயங்களைக் கையாளுகின்றனர், மற்றைய தலைவர்களுடன் கலந்தாலோசிப்பதில்லை, தகவல்களைத் தெரியப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக கிளப்பப்பவதுண்டு. அப்படித் தங்களுக்குள் விடயங்களை வைக்காமல் மற்றைய தலைவர்களுக்குப் பகிர்வதால் நேருவது என்னவென்பதற்கான உதாரணம்தான் நான் இன்று சொல்லப்போவது.

நீண்ட காலத்தின் பின்னர் அண்மையில் கூட்டமைப்பின் தலைவரும், கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான இரா.சம்பந்தன் நாடாளுமன்றுக்கு வந்திருந்தார். அன்றைய தினம் நாடாளுமன்றக் குழுவையும் கூட்டி அவர் பேசியிருந்தார்.

அப்போது ஒரு தகவலை தமது சக எம்.பிக்களுக்கு அவர் தெரிவித்திருந்தார்.

*“இந்தியாவுடன் சில முயற்சிகள் நடக்கின்றன. நாம் விரைவில் இந்தியாவுக்குப் போக வேண்டியிருக்கும். ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தயவு செய்து என்ன காரணம் கொண்டும் இந்தத் தகவலை யாரிடமும் பகிராதீர்கள். வெளியே சொல்ல வேண்டாம்.”* – என்று அங்கு குறிப்பிட்டிருக்கின்றார் சம்பந்தன்.

இந்த விடயத்தை ஒட்டி சில தகவல்களை அங்கு கசிய விட்ட சம்பந்தன்,அவை தற்போதைக்கு வெளியே வரக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவையும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருந்தார்.

இதேவேளை கடந்த புதன்கிழமை அமெரிக்கத் தூதுவர் தமது இல்லத்தில் தனியான இரவு விருந்து ஒன்றுக்கு கூட்டமைப்பின் சுமந்திரனையும் அரசுப் பக்கத்தில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸையும் அழைத்திருந்தார்.

சுமந்திரன் தமது கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தி அவரின் அனுமதியுடன் சென்றார்.

அதேபோல ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகிய மூன்று ராஜபக்ஷக்களின் அனுமதியுடன் பீரிஸ் இரவு விருந்துக்குச் சென்றார்.

அமெரிக்கத் தூதுவர் மற்றும் அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரி ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அடிப்படைகள் குறித்து ஒரு பூர்வாங்கக் கலந்தாய்வை பேராசிரியர் பீரிஸும், சுமந்திரனும் அமெரிக்க தூதுவர் முன்னிலையில் மேற்கொண்டனர். அவ்வளவுதான்.

தரப்புகளைச் சந்திக்க வைப்பதன் மூலம் – பேச வைப்பதன் மூலம் – பேச்சைத் தொடங்குவதற்கான சிறு பொறி கிளர்ந்தெழாதா என்ற எதிர்பார்ப்பில் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் அவ்வப்போது முன்னெடுக்கும் சந்திப்பு முயற்சிகளில் ஒன்றுதான் இது.

இதற்கு அப்பால் அந்தச் சந்திப்பில் ஏதும் இல்லை. எனது இந்த தகவலை வைத்துக் கொண்டு அமெரிக்க மத்தியஸ்தத்தில் அரசு – தமிழர் தரப்பு புதிய, பூர்வாங்க முயற்சி என்றெல்லாம் இவ்விடயத்துக்கு நீங்கள், கைகால் வைத்து கற்பனை பண்ணி, உங்களுக்குள் அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது.

இந்த வரிசையில் – இதுபோன்று – மேற்குலகத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடக்கும் வழமையான சந்திப்பில் ஒன்றுதான் இது. அதைத் தாண்டி. இந்தச் சந்திப்பில் பெரிய விடயம் – பெறுபேறு – ஒன்றுமில்லை.

ஆனாலும் ஒரு சாதகமான விளைவு இருந்தது.

அடுத்த நாள் செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் எதிரும் புதிருமாக சந்தித்த நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனும் சுமார் நான்கு. ஐந்து நிமிட நின்ற நிலையில் உரையாடினார்.

அப்போது “*நேற்றிரவு உங்களுடன் பேசிய விடயங்கள் குறித்து பேராசிரியர் பீரிஸ் தகவல் தந்தார். இயன்ற வரையில் நாங்கள் ஒரு புது ஆரம்பம் ஒன்றைத் தொடங்குவோம்.”* – என்று பஸில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதன்படி பார்த்தால் கடந்த வாரம் புதன்கிழமை அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இரவு விருந்துடன் நடைபெற்ற பேச்சு, அத்துடன்செத்துவிடவில்லை. அது தொடருவதற்கான வாய்ப்புண்டு. அதற்குப் பிராண வாயு ஊட்டப்பட்டிருக்கின்றது. அதனால் அந்தப் பேச்சு – சந்திப்பு – குறித்து தமிழ் மக்கள் சிறிது எதிர்பார்ப்புக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

சரி, இனி, விடயத்துக்கு வருகிறேன். கூட்டமைப்பின் சில தலைவர்கள், சம்பந்தன் – சுமந்திரன் இணை தங்களுக்குள் மட்டும் விடயங்களை வைத்துக் காய் நகர்த்துகின்றது, எங்களுக்குக் கூறுவதில்லை என்று விசனம் தெரிவித்து வருகின்றமையால் மேற்படி அமெரிக்கத் தூதுவர் இல்லத்தில் நடந்த விடயங்களை – பேச்சுக்களை – கூட்டமைப்பின் மற்றொரு பிரமுகருக்குக் சொல்லியிருக்கின்றார்.

அவ்வளவுதான். கூட்டமைப்பினர் விரைவில் இந்தியா போகப் போகின்றனர் என்ற செய்தியும் ஜி.எல்.பீரிஸ் – சுமந்திரன் சந்திப்பு மூலம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முழுமுயற்சிகள் ஆரம்பமாகி விட்டன என்ற விவரங்களுடன் அது பற்றிய செய்தியும் ஒரே வார வெளியீட்டில் அம்பலமாகியிருக்கின்றது.

செய்தியை ‘லீக்’ பண்ணிய தரப்பு எது என்பது சம்பந்தன் – சுமந்திரன் இணை அறியும்.

அந்தத் தலைவர் மீது சம்பந்தன் செம ‘காண்ட்’ இல் இருக்கின்றார் என்றும் தகவல்.

இவற்றைப் பார்க்கும் போது பிற தலைவர்களுக்குத் தெரியப்படுத்தாமல் சம்பந்தன் – சுமந்திரன் இணை தங்களுக்குள் குசுகுசு வென்று விடயங்களைக் கையாள்வது தப்பில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

நீங்கள் என்னநினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

## நல்லூர் திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உற்சவம் முழுமையான சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பேணி அடியார்களின் பங்குபற்றுதலின்றி அல்லது அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடனேயே நடைபெறவுள்ளது.

எனவே, இந்த நெருக்கடிமிக்க அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மிக மிக பொறுப்புடனும் அவதானத்துடனும் நடந்து கொள்ளுமாறு நல்லைக் கந்தன் அடியார்களை மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியால் விடுக்கப்படும் சுகாதார நடைமுறைகளை கருத்தில்கொண்டும் சுகாதார அமைச்சால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கேற்பவும் நடைமுறைகளில் மாற்றங்கள் பற்றி அடியார்களுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படும்.

குழந்தைகளும் சிறுவர்களும் முதியவர்களும் ஆலயத்துக்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும்.

கொரோனா நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீதித்தடையில் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் வேளையில் அடியார்கள் முழுமையாக நடைமுறைகளை பின்பற்றுவதோடு தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பதும் அவசியமாகும்.

ஆலயத்துக்கு அனுமதிக்கப்படும் வேளையில் ஆண் அடியார்கள் வேஷ்டியுடனும் பெண்கள் கலாசார உடைகளுடனும் வருதல் வேண்டும்.

சுகாதார நடைமுறைகளுக்கேற்ப அடியார்கள் ஆலயத்தினுள் வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவஸ்தானத்தின் அறிவுறுத்தல்களின்படி அவர்கள் ஆலய வளாகத்தினுள் தரித்து நிற்கவோ அமர்ந்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உரிய சமூக இடைவெளியுடன் வழிபாட்டை நடாத்திச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

பக்தர்களின் நன்மை கருதியும் ஆலய உற்சவம் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் இம்முறையும் வீதித்தடைகள் முழுமையாகப் போடப்படும். வழமைபோல் மாற்றுப்பாதை அமுலில் இருக்கும்.

அடியவர்களின் சுகாதார நன்மையைக் கருத்தில்கொண்டு ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல அடியவர்களும் முத்திரைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியால் மாத்திரமே ஆலயத்துக்குச்செல்லஅனுமதிக்கப்படுவர்.

ஆலயத்துக்கு வந்து சேரும் ஏனைய மூன்று வீதிகளும் அடியவர்கள் செல்வதற்கு முழுமையாகத் தடை செய்யப்படும். வீதித்தடைக்கு உள்ளே நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மாநகர சபையின் அனுமதி அட்டையுடன் ஏனைய வீதித் தடைகளினூடாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்தினுள் அடியவர்களை அனுமதிப்பது, எத்தனை பேரை அனுமதிப்பது போன்றவை தொடர்பாக அவ்வப்போது உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சுகாதாரத் தரப்பின் வழிகாட்டலோடு தீர்மானிக்கப்படும்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்கள் மேற்கொள்ளுதல், தாகசாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலிலும் ஆலயத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள்,நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலய உற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோர் அல்லது மீறுபவர்களின் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்தில்கொண்டு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்தக் கொரோனா தொற்றுச் சூழலால் எம்மால் எடுக்கப்படும் விசேட நடவடிக்கைகளால் பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துவதோடு தற்போது எழுந்துள்ள மிகக்கடுமையான நெருக்கடி நிலையைக் கருத்தில்கொண்டு வழிகாட்டல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வேண்டுகின்றோம் – என்றுள்ளது.

## யாழில் கர்ப்பிணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று வெளிநோயாளர் பிரிவிலேயே மருத்துவ அறிக்கையிடப்பட்டது. அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை சுகாதார நடைமுறைகளின் கீழ் தகனம் செய்ய திடீர் மரண விசாரணை அதிகாரி அறிக்கையிட்டார்.

## பெற்ற தாயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இதன்போது அவருக்குக் கொரோனாத் தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இலங்கையில் தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவான கொரோனாக் காவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயி ரத்து 340 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல்திணைக்களம்மேலும்தெரிவித்துள்ளது.

University of Jaffna, Sri Lanka
WALK-IN-INTERVIEW

A walk in interview for the post of Medical Laboratory Technologist on Assignment basis will be held on 24.08.2021 on Tuesday at 1.30 p.m at the Board Room of the University.

**Qualifications:**

A degree in Medical Laboratory Technology / Medical Laboratory Sciences obtained from a recognized University in Sri Lanka and registered as a Medical Laboratory Technologist in the Sri Lankan Medical Council.

**OR**

Certificate of Competence issued by the Health Department School of Medical Laboratory Technologist or equivalent certificate with 03 years experience and registered under the Sri Lankan Medical Council.

**Age**:

Applicants should be less then 50 years of age.

**Salary : Rs.60,000/=** (fixed) per month

Candidates are requested to appear with relevant certificates, NIC and **self prepared applications.**

**Registrar**
**University of Jaffna**
**10.08.2021**

# திருமண வைபவ நிகழ்வுகளில் 50 பேர் மட்டுமே பங்குபற்றலாம்



## இராணுவ தளபதி அறிவிப்பு

மாகாணங்களுக்கு இடையே யான பயணக்கட்டுப்பாடு நேற்று (செவ்வாய்க்கிழமை) முதல் கடுமையாகக் கண்காணிக்கப் படுகிறது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுடன் கலந்துரையா டலை அடுத்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அத்தியாவசிய மற்றும் சுகாதார ஊழியர்க ளைத் தவிர வேறு யாரும் எல்லைகளைக் கடக்க அனுமதி வழங்கப்படாது என்றும் குறிப் பிட்டார்.

அத்தோடு திருமண வைபவங் களுக்கு வருபவர்களின் எண் ணிக்கையை 150 இல் இருந்து 50 ஆக மட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு மேலதிகமாக சுகாதார அமைச்சு புதிய சுகாதார வழிகாட்டு தல்களை வெளியிடும் என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இருப்பினும் நாட்டை முடக்கவோ அல்லது நாளாந்த நீதியில் பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்தோ இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை என் றும் அவர் குறிப்பிட்டார்.

# கொரோனாவில் இருந்து மேலும் 2,644 பேர் குணம்

இலங்கையில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 644 பேர் பூரண குணமடைந்துள்ள னர். இதனையடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 98 ஆயிரத்து 162 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்க ளின் எண்ணிக்கை 3 லட்சத்து 32 ஆயிரத்து 947 ஆக பதி வாகியுள்ளது. அதில் 29 ஆயிரம் 563 பேர் தொடர்ந்தும் சிகிச் சைபெற்று வருகின்ற அதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆயிரம் 222 ஆக உயர்ந்துள்ளது.

# அஸாத் சாலி தாக்கல் செய்த மனுமீதான விசாரணையில் இருந்து நீதியரசர் விலகல்



அசாத் சாலி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையில் இருந்து உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் விலகியுள்ளார்.

தன்னை சி.ஐ.டி.காவலில் இருந்து விடுவிக்க உத்தரவிடக் கோரி அஸாத் சாலி உயர் நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு விசாரணைக்கு வந்தபோது தனிப்பட்ட காரணங் களால் மனுமீதான பரிசீல னையில் இருந்து விலகுகிறேன் என நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து அஸாத் சாலி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான பரிசீலனை ஓகஸ்ட் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் நல் லிணக்கத்திற்கு தீங்கு விளை விக்கும்வகையில்சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்தமைக் காக அவர் கைது செய்யப்பட்டி ருந்தார். இதனை அடுத்து பயங்கரவாதத்தடைச்சட்டம் மற் றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன் படிக்கைசட்டத்தின் கீழ் அஸாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன.

# யாழ். முதல்வர் மணிவண்ணனுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்




யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகரசபை உறுப்பினர்களான ரஜீவ்காந்த், கிருபாகரன் ஆகிய இருவரும் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை நுழைவாயில் முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சபையின் உறுப்பினரான ரஜீவ்காந்தின் வட்டார அபிவிருத்தி நிதியை அரசியல் பழிவாங்கல் காரண மாக நிறுத்தி வைத்திருக்கும் முதல்வரின் செயற்பாட டைக்கண்டித்து இந்த உணவுதவிர்ப்புப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் திட்டமிட்ட வகையில் அரசியல் பழி வாங்கல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை தொடர் பாக தாம் உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட பல தரப்பினிடமும் முறையிட்டு உள்ளனர் எனவும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என் றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும் தமக் கான உரிய தீர்வு விரைந்து கிடைக்காதவிடத்து தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போகிறோம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# உணவுகள், மருந்துகள்; மக்கள் அவதானம்!

## விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

சமூக வலைத்தளங்களில் உள்ள உணவுகள் மற்றும் மருந்துகளை வைத்தியரின் பரிந்துரையின்றி பயன்படுத் துவதைத் தவிர்க்குமாறு சுகா தார அமைச்சு பொது மக்க ளிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

கொவிட் வைரஸிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடிய உணவுகள் என சமூக வலைத்தளங்களில் பரவும் தகவல்களை நம்ப வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் எப்போதும் வைத் திய பரிந்துரைக்கமைய செயற்பட வேண்டும் என பிரதி சுகாதாரப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். கொவிட் தொற் றுக்காக எடுத்துக்கொள்ள வேண் டிய உணவு மற்றும் மருந்து பலவற்றை சமூகவலைத்தளங் களில் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான உணவுகள் மற்றும் மருந்துகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண் டும். அவற்றில் எது உண்மை யானது எது பொய்யானது எனத் தெரியவில்லை. எனவே அவற்றைப் பெற முன்னர் கட் டாயமாக வைத்தியரின் ஆலோ சனைகளை பெற்றிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சரியான நேரத்தில் பொருத்தமான முடிவு எடுக்கப்படும் என்கிறார் ரமேஷ் பதிரண



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

அவ்வாறு எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் சுகாதாரத் தரப்பினரின் பரிந்துரையின் அடிப்படையில் எடுக்கப்பட்டவை என்றும் அவர் கூறினார். நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், தற்போதைய அரசாங்கம் மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த முயற் சிக்கவில்லை என்றும் கூறினார்.

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத் தப்படுமா என்ற கேள்விக்கு பதி லளித்த அவர், சுகாதார நிபுணர்க ளின் ஆலோசனையின் அடிப் படையில் சரியான நேரத்தில் மற் றும் பொருத்தமான முடிவுகள் எடுக்கப்படும் என அமைச்சர் ரமேஷ் பதிரண குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள்




கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உளநல பொருள்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

சுவிஸ் மக்களின் நிதி உதவியுடன் சாந்திகம் நிறுவனத்தால் இந்தப் பொருள்கள் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட பிராந் திய சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன் உள்ளிட் டோரிடம் வழங்கி வைக்கப்பட்டன.

கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான பொருள்கள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைவாக இந்தப் பொருள்கள் கையளிக்கப் பட்டன.

இவை கிருஸ்ணபுரம், பாரதிபுரம், முறிகண்டி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையங்களில் உள்ள நோயாளர்களின் உளநல விருத்திக்காக பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கதாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை ஒன்றுபட்ட நிலைமை

தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் விமர்சகர் ஒருவர் – ஈழத் தமிழர்களின் நலன்களுடன் நீண்ட காலம் இணைந்து செயற்பட்டு வருகின்றவர் – ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டிக் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

ஓரளவுக்கு நீதி நியாயமான – புத்திபூர்வமான – சில அம்சங்கள் அந்தக் கேள்வியில் புதைந்து கிடக்கின்றமையை நாம் அவதானிக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களின் நிலைமை இன்று மிகவும் நெருக்கடிக் குள்ளும் ஆபத்திலும் உள்ளது.

நியாயமான உரிமைகளை வேண்டி, கௌரவமான வாழ்வைத் தேடி, நியமான அபிலாஷைகளை நிறைவேற்றக் கோரி, முதலில் மூன்று தசாப்த காலம் அஹிம்சை வழியிலும், அடுத்த மூன்று தசாப்த காலம் ஆயுத மார்க்கத்திலும், பின்னர் திரும்பவும் ஒரு தசாப்த காலம் காந்தீய நெறியிலும் அவர்கள் நடத்திய போராட்டங்கள் அவமாகி விட்டன.

தங்கள் வாழ்வியல் உரிமைகளை – தங்கள் தனித்துவத்தை – தங்கள் இனத்துவ அடையாளத்தை – ஏன் கடைசியில் வாழ்வியலையே – தொலைத்து விட்டு, பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்கு ஆட்சியாளர்களின் கொடூரத்தில் அவற்றை அடியோடு இழக்கும் அவலத்தில் தமிழினம் இன்று உள்ளது.

அடிப்படை உரிமைகள் என்றும், மனித உரிமைகள் என்றும், பாரம்பரிய இனத்துவ – வாழ்வியல் உரிமைகள் என்றும் அதிகம் பீற்றிக் கொண்டு திரியும் ஒரு சர்வதேச உலகின் முன்னால் – அதன் கண்களின் முன்னால் – இலங்கைத் தீவின் வடக்கையும், கிழக்கையும் காலங்காலமாகத் தமது பூர்வீக இனமாகக் கொண்டு வாழ்ந்த ஓரினம், பேரின வாதத்தால் அழிக்கப்படும் குரூரம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

வடக்கையும் கிழக்கையும் பூர்விகத் தாயகமாகக் கொண்ட இந்தத் தமிழர்கள், இந்தியாவின் தென் மாநிலத்தவர்களான தமிழர்களோடு தொப்புள் கொடி உறவு கொண்டவர்கள்.

அவர்களின் முன்னிலையிலேயே ஈழத் தமிழினம் வாழ்வியல் ரீதியாகவும் இன்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழினத்துக்காக, இலங்கையுடன் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்ட இந்தியா, இன்று ஈழத் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழும் அடக்கு முறைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

இவ்விடயத்தில் இந்தியா தலையிட்டு ஈழத் தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்ய வேண்டிய தார்மீகக் கடப்பாடும், பொறுப்பும் கொண்டுள்ளது என்று பல தரப்புகளினாலும் வலியுறுத்தப்படுகின்றது.

அதனை இந்தியாவும் கூட புரிந்து கொண்டு அவ்வப்போது தனது பிரதிபலிப்புகளைக் காட்டி வருகின்றது.

இலங்கையில் தமிழர்களின் தாயக பூமியில் அவர்கள் நீதி, நியாயமான வாழ்வியலை முன்னெடுக்க கூடியதாக – அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் – அதிகாரங்கள் பகிரப்படுவதே இலங்கையின் ஐக்கியத்துக்கும், ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் சாதகமானது என்று அண்மைக் காலத்தில் இந்தியா திரும்பத் திரும்ப வலியுறுத்தி, வெளிப்படுத்தி வருகின்றமை ஆழமான அர்த்தபரிமாணங்களைக் கொண்ட விடயமாகும்.

தனது இந்தக் கருத்தியலை ஒட்டி சில நடவடிக்கைகளை – நகர்வுகளை – இந்தியா செய்வதற்கான தள நிலைமையை – கள நிலைவரங்களை – பேணுவது, பாதிக்கப்பட்டு நியாயத்தை எதிர்நோக்கியிருக்கும் தமிழினத்தின் பொறுப்பாகும்.

இவ்விடயங்களை இந்தியா மட்டுமல்லாமல், இந்தியா போன்ற பிற சர்வதேசங்களும் கையாள்வதற்கு தமிழர்கள் தரப்பில் ஒற்றுமைப்பட்ட – ஐக்கியமான – கருத்தியல்புடன் ஒரு தலைமைத்துவம் அவசியம். அப்படி இருந்தால்தான் இந்தியா போன்ற சர்வதேச தரப்புகள்,அந்தத் தலைமையுடன் அணுகி விடயங்களைக் கையாள முடியும் என்பது அந்த அரசியல் விமர்சகர் சுட்டிக்காட்டும் பிரதான விடயமாகும்.

தமிழர் தரப்புகள் அரசியல் ரீதியாக தங்களுக்குள் பிளவுபட்டு, கன்னை பிரிந்து, ஒன்றையொன்று காலை வாருவதையே அரசியலாக முன்னெடுத்தால், தமிழர்களுக்குப் புறப்பலமாக வரக் கூடிய இந்தியா போன்ற தரப்புகளும் அதனை முன்னெடுக்க முடியாத நிலைமையே ஏற்படும். அதுதான் இப்போது யதார்த்தப் புறநிலைவரமாக நீடிக்கின்றது.

தமிழ்க் கட்சிகள், தரப்புகள், அமைப்புகள், இயக்கங்கள் போன்றவை தமக்குள் முட்டிமோதி அரசியல், செய்யப்பட்டும். அது சுயநல அரசியலாகவோ அல்லது வெளிப்பகட்டுக்கு பொது நல அரசியலாகவோ இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால் மறுபுறத்தில் இந்தியா உட்பட்ட சர்வதேச தரப்புகள் தமிழர் என்ற பக்கத்துடன் விடயங்களைக் கையாள்வதற்காக வேனும் ஒன்றுபட்ட கட்டமைப்புக்குள் ஐக்கியப்பட்டுச் செயற்பட தமிழர்களின் பிரதிநிதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர் முன்வர வேண்டும்.

# எமது வளங்களைச் சுரண்டுகின்ற அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் திடசங்கற்பம்



மக்களின் ஒளிமயமான எதிர்காலத்திற் காகவே அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்துவதாகவும் வழிமுறைகள் மாற்றமடைந்திருந்தாலும் தன்னுடைய நோக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், வளங்களைச் சுரண்டுகின்ற அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குக் கடந்த திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டு, பிரதேச கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 16 கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய சட்ட விரோதச் செயற்பாடுகள், உள்ளூர் இழுவை வலைப் படகுகளால் ஏற்படும் பாதிப்புக்கள், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைக் கட்டுப்படுத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டன.

மேலும், எரிபொருள் நிரப்பும் நிலையம், வலை மற்றும் மீன் தீவன உற்பத்திகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடு, நாகதேவன் துறை மற்றும் நல்லூர் போன்ற இடங்களில் இறங்கு துறைகளை உருவாக்குதல், கடலட்டை போன்ற பண்ணை முறையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடு உட்பட பல்வேறு எதிர்பார்ப்புக்கள் தொடர்பான கோரிக்கைகளும் பூநகரி கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

தமிழ் மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டேன் எனவும், பின்னர் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மாற்றுத் திட்டத்தைத் தெரிவு செய்தேன் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கான ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதே இலக்காக இருக்கின்றது.

இந்நிலையில், தற்போது கிடைத்திருக்கின்ற அமைச்சு அதிகாரத்தின் ஊடாக சாத்தியமான பொருளாதாரக் கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்றும், இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பூநகரி பிரதேச கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் சாத்தியமான வழிவகைகளின் ஊடாக நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் தடுப்பூசி ஏற்றுகையின் வெற்றியின் பின்னணியில் சீனா

## சுகாதார அமைச்சர் புகழாரம்

இலங்கையின் தடுப்பூசி ஏற்றுகை வெற்றியின் பின்னணியில் சீனா இருக்கின்றது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் குய்ஸெண்ஹோங்குடன் சீனத் தூதரகத்தில் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் தடுப்பூசி ஏற்றுகையின் வெற்றிக்கு சீன அரசாங்கம் காத்திரமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் கொவிட் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சீனா வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இவ்வாறான நடவடிக்கைகள் வழியமைப்பன என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொவிட் தொற்றைகட்டுப்படுத்துகையில் இலங்கைக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீனா அறிவித்துள்ளது.

# வவுனியா நகரசபை, செட்டிகுளம் பிரதேச சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியால் புதிய உறுப்பினர்

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா நகர சபை மற்றும் செட்டிகுளம் பிரதேச சபையின் இரு உறுப்பினர்கள் பதவி விலகியமையை அடுத்து அப்பதவிக்கு மேலும் இருவர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந.சிவசக்தி ஆனந்தனால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தால் சிபார்சுசெய்யப்பட்டு அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வவுனியா நகரசபைக்கு நிருபா சச்சிதானந்தன், செட்டிகுளம் பிரதேச சபைக்குப் பூலோகம் இந்திரன் ஆகியோர் சட்டத்தரணி துரைசிங்கம் ஜெயானந்தன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

வவுனியா நகரசபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள நிருபா சச்சிதானந்தன் வவுனியா சென்சுலான் முன்பள்ளியில் 10 வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றமையுடன், பெண் தலைமைத்துவ மகளிர் அமைப்பு ஒன்றின் மதவுவைத்தகுளம் பகுதியின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.



வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள பூலோகம் இந்திரன் வீரபுரம் கூட்டுறவுச் சங்க கிளை தலைவராகவும் மற்றும் வீரபுரம் ஓட்டோ சங்கத் தலைவர்,வீரபுரம் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தினுடைய தலைவர் மற்றும் சின்னத் தம்பனை கமக்காரர் அமைப்பின் தலைவராக பல்வேறுபட்ட சமூக, கிராம மட்டத்தில் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் -47

ந.வித்தியாதரன்

உலக இந்து மாநாட்டில் இறுதிநாள் நிகழ்வுகள் 1982 ஏப்ரல் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. நான் ஊடகவியலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவில் எனது அலுவலக ஆசிரிய பீடத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அமர்ந்திருந்தேன். நிகழ்வுக்கு வந்த எல்லோரினதும் கைகளிலும் அன்றைய சிந்தாமணி வார இதழ் இருந்தது - மண்டப வாசலில் வைத்து இலவச விநியோகம் நடந்தமையால். பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் சாதி பார்ப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஆதீனங்களும் மேடையில் இருந்தன. மாநாட்டில் இந்த விடயம் வெளிப்படையான ஒரு பேசுபொருளாக இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஒவ்வொருவரும் தங்களுக்குள் முணுமுணுத்து அது குறித்துப் பேசிக்கொண்டனர். அது மாநாட்டில் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தி இருப்பதை உணர்ந்தேன்.

ஊடகவியலாளருக்கான பகுதியில் இருந்த ஏனைய பத்திரிகையாளர்களும் அந்தச் செய்தியை சிலாகித்துப் பேசிக் கொண்டனர்.

*“இப்படி நெத்தியடி மாதிரி தலைப்பிட்டு நேரடியாக கொடுக்கிற துணிச்சல் சிவநாயகத்தாருக்கு மாத்திரம்தாண்டா இருக்கு...”* - என்றார் மற்றொரு பத்திரிகையின் மூத்த உறுப்பினர் ஒருவர்.

ஆசிரியர் சிவநாயகத்தையும் தினபதியையும் அடிக்கடி குறைகூறும் இன்னொரு நண்பர் இருந்தார். அவர் தினபதியின் பழைய நிருபர். ஏதோ முரண்பாடு காரணமாக தினபதியை விட்டு விலகி



யவர் என்ற பேச்சும் உண்டு. இன்னொரு பத்திரிகையில் இணைந்து கொண்டு விட்டார். அடிக்கடி தினபதி செய்திகளை தன் விருப்பப்படி விமர்சித்தபடி இருப்பார். அது அவர் சுதந்திரம். அவர் முறைப்பாட்டை நாங்கள் ஒரு காதில் கேட்டு மறுகாதால் விட்டுவிடுவோம். அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவர் பக்கத்தில் வந்தார்.

*“சரியான டைமிங் பார்த்து வைச்சார் உங்கள் ஆசிரியர் ஆப்புப் பாருங்கோ... இதுதான் சிவநாயகம்...!”* - என்றார். அவர் பாராட்டுகின்றாரா அல்லது உயர்வு நவிழ்ச்சி அணியில் கிண்டலடித்துக் கொள்கிறாரா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாநாட்டின் இடைவேளை சமயத்தில் சர்ச்சைக்குரிய செய்தியின் நாயகர் பத்திரிகையாளர் பகீரதன் ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்த பக்கம் தேடி வந்தார். அப்போதுதான் எனக்கு அழைப்பிதழ் தந்து என்னை நிகழ்ச்சிக்கு அனுப்பி வைத்த சிவநாயகம் ஐயாவின் மகாத்மியம் எனக்குப் புரிந்தது.



பி.பி.ஸி. தமிழ்ச் சேவை அலுவலகத்துக்கு சிவநாயகம் ஐயா சென்றிருந்த போது.....

எங்கள் பக்கம் பகீரதனை யாரோ சைகை காட்டி அனுப்பி வைத்தனர். எனக்கு மூன்றாவது ஆசனத்தில் இருந்த கருணாரட்ணத்திடம்தான் அவர் முதலில் பேசினார்.

*“நீங்கள் சிந்தாமணி பத்திரிகை நிருபரா?”* - அவர் கேட்டார்.

*“ஆம்.”* - என்றார் கருணாரட்ணம்.

*“நான் பத்திரிகையாளர் பகீரதன். நீங்கள்தான் வித்யாதரனா?”* - என்று அவர் கேட்டார்.

*“இல்லை. இவர்தான்”* - என்று என் பக்கம் கையைக் காட்டினார் கருணாரட்ணம்.

என்னைப் பார்த்தார் பகீரதன். அவர் பார்வையில் ஓர் ஆச்சரியம் தெரிந்தது. இந்தச் சுண்டைக்காய் சைஸ் சின்னப் பையன் எழுதியதற்கு சிந்தாமணி முன் பக்கத்தில் எவ்வளவு இடம் கொடுத்திருக்கின்றதா என்று ஓர் ஏளனப் பார்வை அவர் முகத்தில் தென்பட்டது. எனினும் என்னைப் பார்த்து நட்புறவுடன் சிரித்தார். நானும் புன்னகைத்து வைத்தேன்.

*“நீங்களா அந்த செய்தியை எழுதினீர்கள்?”* என்றார் பகீரதன். அது நட்புறவுடனான கேள்வியாகத்தான் இருந்தது.

நான் பதிலுக்கு *“எந்தச் செய்தி?”* என்று ஒன்றும் தெரியாத மாதிரி ஒரு பீலா விட்டேன்.

*“அதுதான் இன்றைய சிந்தாமணி தலைப்புச் செய்தி. இன்றைய மாநாட்டில் ஒரு கலக்கு கலக்கி எல்லோருடைய பேசுபொருளாகவும் என்னை மாற்றி விட்டு ஒன்றும் தெரியாதவர் போல எந்தச் செய்தி என்று கேட்கின்றீர்கள்?”* என உரிமையுடன் கோபிப்பது போல பேசினார் அவர்.

நான் என் அப்பாவித்தனத்தை விட்டுக் கொடுக்காத மாதிரி ஒரு நமுட்டுச் சிரிப்பு சிரித்து வைத்தேன். ‘

*‘ஓ..!அதுவா? முந்த நாள் மாலை நிகழ்வு செய்திகள் பலவற்றை எழுதிக் கொடுத்தேன். அதில் உங்கள் பேச்சும் ஒன்று. செய்தியில் ஏதும் பிழையா..?”* என்றேன் நான்.

*“இல்லை இல்லை. அப்படி சொல்ல மாட்டேன். நான் சொன்ன சொற்கள்தான் அவை. வசனங்கள் முன்பின்னாக இருக்கலாம். ஆனால் அதில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் உங்களைத் தேடி வந்தேன். ஒன்று சாதி பார்க்கும் முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற என் பிரதான உரையில் ஒரு சிறுகுறிப்புத்தான் நீங்கள் ஹைலைட் பண்ணிய விடயம். நான் அதனை ஒரு லைற்றர் வெயினில் ஒரு பாஸிங் ரிமாக்ஸ் ஆகச் சொன்னேன். அதை நீங்கள் பூதாகரப்படுத்தி அதையே ஒரு பெரிய இஷூவாக்கி விட்டீர்கள். நான் அதைக் குறை சொல்ல மாட்டேன். அதுதான் பத்திரிக்கையாளர் வேலை. எனக்கும் தெரியும். அடுத்தது - நானும் உங்கள் ஆசிரியர் சிவநாயகமும் ரொம்ப நெருங்கிய நண்பர்கள். இந்த மாநாட்டு பணியில் அவரும் சம்பந்தப்பட்டிருப்பதால் பத்திரிகை அலுவலகத்துக்கு ஒழுங்காக வந்திருக்க மாட்டார். அவர் இருந்திருந்தால் இந்தச் செய்தியை இப்படி வர விட்டிருக்கமாட்டார் - எங்கள் நட்பு கருதி. இப்படிச் செய்தியைப் போட்டு என்னைச் சிக்கலில் மாட்டு விட்டிருக்கவும் மாட்டார். இன்னுமொரு விடயம். பொள்ளாச்சி மகாலிங்கம் ஐயாவின் உரைதான் அன்று பேச்சுக்களில் முக்கிய விடயம். நான் அவருக்கு உதவியாக வந்தேன். என் பேச்சைப் பெரிதாக்கி மகாலிங்கம் ஐயாவின் பேச்சை சிறிதாக்கி விட்டீர்கள். அவரும் உங்கள் ஆசிரியருக்கு ரொம்பவும் வேண்டியவர். நீங்கள் செய்தியை மாறி முக்கியத்துவம் கொடுத்து இருக்கலாம்.”* - என்று ஆதங்கப்பட்டார் அவர்.

நான் பதில் கூறாமல் சிரித்தபடி பெருமாள் மாடு போல தலையாட்டி வைத்தேன்.

அந்தச் செய்திக்கு கதை, வசனம், டைரக்‌ஷன் எல்லாமே சிவநாயகம் ஐயா தான். ஆனால் அவரின் நெருங்கிய நண்பரான சம்பந்தப்பட்ட செய்தியின் கதாநாயகர் பத்திரிகையாளர் பகீரதனோ இந்தச் செய்தி சிவநாயகம் ஐயாவின் கைகளுக்குப் போயிருந்தால் இப்படியாகியிருக்காது, ஐயா செய்தியை இப்படிப் பிரசுரித்திருக்க மாட்டார் என்ற பாணியில் நியாயம் கற்பித்துக் கொண்டிருந்தார்.

நான் சிரித்துச் சமாளித்து அனுப்பி வைத்தேன். செய்தி இந்த வடிவத்தில் பிரசுரமானமைக்கு முழு முழு பொறுப்பும் அவர்தான் என்பது தொடர்பில் நாங்கள் யாருமே மூச்சுக் காட்டவில்லை. பகீரதன் அங்கிருந்து அகன்ற பின்னர் எங்களுக்குள் ஒரு நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டோம்.

அடுத்த நாள் காலை ஆசிரியரை போய் அவரது அறையில் சந்தித்தேன் - மாநாட்டின் இடையே பகீரதன் வந்து பேசியமை பற்றிய தகவலைக் கூறுவதற்காக.

*“வாரும் ஐஸே.... என்னவாம் பகீரதன்?”* என்றார் நான் போனவுடன் ஆசிரியர். ஆக, பகீரதன் மாநாட்டிடையே எங்களுடன் பேசியமை பற்றிய தகவல் ஆசிரியருக்கு நேரத்துடன் எட்டிவிட்டமையைப் புரிந்து கொண்டேன்.

ஆசிரியர் ஒரு குட்டி ‘லெக்ஸரே’ அடித்தார். அது என்னுடைய எதிர்காலப் பத்திரிகை பணிக்கான ‘கீதா உபதேசம்’ என்பதை அன்று புரியாமல் நான் முழுமையாக உள்வாங்கிக் கொண்டேன்.

*“முதல் விடயம் ஆசிரிய பீடத்தில் யார் செய்தியை எழுதினார்கள், யார் எடிட் பண்ணினார்கள், யார் தலைப்பிட்டார்கள் என்பவையெல்லாம் வெளியில் தெரிவிக்கப்படக் கூடாத இரகசியங்கள். உம்மைத் தேடி அப்படி விசாரணைகள் வரும், நீர் அதனை எப்படிக் கையாளப் போகிறீர் என்பதைக் கண்டறியவே மாநாட்டுக்கு உம்மையும் அனுப்பி வைத்தேன். மாநாட்டு நேரம் முழுவதும் எங்கள் ஆசிரிய பீட சிரேஷ்ட உறுப்பினர்களோடு உம்மை அமர்ந்திருக்க வைத்தேன். நீர் பகீரதனைக் கையாண்ட விதம் முற்றிலும் சரியானதாகும். முதலில் ஆசிரிய பீட இரகசியங்களை வெளியே கசிய விடலாகாது. ஆசிரிய பீடக் குடும்பமாக நாங்கள் ஒன்றுபட்டு விடயங்களை அணுக வேண்டும். அப்படிச் செய்தால் எந்த நெருக்கடிக்கும் நாம் முகம் கொடுத்துச் சமாளிக்கலாம். தான் தப்புவதற்காக ஆசிரிய பீடத்தில் யாரையும் காட்டிக் கொடுக்கக் கூடாது. எனக்குத் தெரியாமல்தான் அந்தச் செய்தி பிரசுரமாகி இருக்கும் என்று தனது மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கிறார் பகீரதன். அது அப்படியே இருக்கட்டும். ஆனால் ஒரு விடயத்தை கவனித்தீரா? நீர் எழுதிய செய்தியில் இருந்த எந்த ஒரு சொல்லையும் கூட நாங்கள் மாற்ற வில்லை.”* - என்றார் ஆசிரியர்.

*“இல்லை ஸேர். வசனங்கள் முன்பின்னாக மாற்றப்பட்டுள்ளன”* - என்றேன் நான்.

*“ஆமாம். நான்தான் அதைச் செய்தேன். கருத்துக் கோர்வையாக வருவதற்கான எடிட்டிங் அது. அப்படிக் கோர்வையாக மாற்றியமையால்தான் நமது தலைப்புக்குரிய வலிமையை அந்த உரை பெற்றது. எடிட்டிங்கில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம் அதுதான்.”* - என்று ஒரு வகுப்பு எடுத்தார் ஆசிரியர்.

*“நட்பு வேறு, எங்கள் பத்திரிகைத் துறைப் பணி வேறு. சமூகத்துக்கு ஒரு செய்தி கொடுக்கப்பட வேண்டும் என்று மனதில் பட்டால் அதைச் செய்தாக வேண்டும். நட்பு, தனிப்பட்ட தொடர்பாடல் என்பவை எல்லாம் அப்புறம்தான். அது விடயத்தில் நாங்கள் மனச்சாட்சிக்கும் எங்கள் பேனாவுக்கு நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்.”* - என்றார் சிவநாயகம் ஐயா.

*“நீர் கேட்ட மாதிரி அமைச்சர் இராஜதுரை எனது நண்பர்தான். லக்ஷ்மண ஐயரும் மிக வேண்டியவர்தான். அதைவிட முக்கியமான விடயம் சமயத்தின் பெயரால் இயங்கும் ஆதீனங்கள் சாதி பார்க்கும் விவகாரம். உலக இந்து மாநாட்டின் இடையே அதைப் புரொஜெக்ட் பண்ணி உண்மையான கலந்தாய்வுக்கு ஒரு சந்தர்ப்பம் - பொன்னான வாய்ப்பு - நமக்கு கிட்டி இருக்கின்றது. இதில் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு முக்கியமல்ல. சமூக, சமய சமரசம்தான் பிரதானம். அதனால்தான் இதனைச் செய்தோம். இதனால் சில நெருடல்கள் வரும் என்று எனக்குத் தெரியும். வந்தன. எதிர்கொள்ளத்தான் வேண்டும்.*

*“உம் வாழ்க்கையில் பத்திரிகையாளர் பேனாவை நீர் பேணப் போகிறீர் என்றால் கடைசிவரை அதற்கு நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். அற்பசொற்ப சலுகைகளுக்காக விருப்பு வெறுப்புகளுக்காக வளைந்து கொடுக்காதீர்!”* - என்றார் ஆசிரியர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில் துணையாசிரியர் கே.கே.இரத்தினசிங்கம் வந்து எனக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டு, ஆசிரியர் கூறுபவற்றைத் தலையாட்டிக் கேட்டுக் கொண்டிருந்தார். சுமார் பத்துப் பதினைந்து நிமிட நேரம் ஒரு குட்டி ‘லெக்ஸர்’ வைத்தார் சிவநாயகம் ஐயா.

(09ஆம் பக்கம் பார்க்க......)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 10

## மின்னியல்


**மாறும் தடையி** (Variable Resistors)

6. படத்தில் காட்டப்பட்டுள்ள மாறும் தடையியை இனங்காண்க.

..........................................................................................

7. இம் மாறும் தடையி ஆக்கப்பட்டுள்ள A இனால் குறிக்கப்பட்டுள்ள கம்பிச்சுருள் எவ்உலோகத்தால் ஆனது? ................................................

8. தேவையான தடைப் பெறுமானத்தைப் பெற்றுக் கொள்ள B இனால் குறிக்கப்பட்டுள்ள நகர்த்தும் அமைப்பு எது? ........................................





**மாறும் தடையியின் தொழிற்பாட்டை அறிதல்**

* இறையோதற்று ஒன்றினைப் பயன்படுத்தி மாறும் தடையியின் தொழிற்பாட்டை அறிவதற்கான பரிசோதனை அமைப்பின் சுற்றுவரிப்படம் காட்டப்பட்டுள்ளது.

9. வழுக்கும் செப்பமாக்கி தொடக்க புள்ளியில் (X) உள்ள போது மின்குமிழின் பிரகாசம் எவ்வாறு காணப்பட்டது? ..

..........................................................




10. வழுக்கும் செப்பமாக்கி y நோக்கி நகர்த்தப்படும் பொழுது மின்குமிழின் பிரகாசத்திற்கு, அம்பியர்மானி வாசிப்பு என்பவற்றிற்கு யாது நிகழும்? மின்குமிழின்

..........................................................................

அம்பியர்மானி வாசிப்பு ..........................................

**ஒளி உணரித் தடையி (Light Dependent Resistor)**



11. மேற்படி தடையியை இனங்காண்க. .......................................

12. மேற்படிதடையியின் குறியீட்டைதருக. .............................


13. ஒளிஉணரித்தடையியின்தொழிற்பாட்டைஅறிவதற்கான பரிசோதனை அமைப்பு தரப்பட்டுள்ளது.

1. படத்திலுள்ளவாறு சுற்றை அமைத்து ஒளி உணரித்தடையைக் கையால் மூடுகையில் உமது அவதானம் யாது?

...................................................

2. உமது விடைக்கான காரணம் யாது?

...................................................




3. பின்னர் கையை எடுத்து ஒளி உணரித் தடை மீது ஒளியை விழச் செய்யின் உமது அவதானம் யாது? ............................

4. உமது விடைக்கான காரணம் யாது?

...................................................

5. மேற்படி செயற்பாட்டினூடாக நீர் பெறும் முடிவு யாது?

..........................................................................

**3 - மின்சுற்று அமைக்கும் கருவிகள்**

* மின்சுற்றுக்களில் துணைக்கூறுகளைத் தொடுப்பதற்கு ஈயம் உருக்கி ஒட்டப் படுகிறது.
* இச்செயற்பாடு பற்றாசு பிடித்தல் எனப்படுகிறது.



a. பற்றாசு பிடிக்கும் உபகரணம் b. ஈயம் c. பற்றாசு பிடித்தல்

பற்றாசுபிடிக்கும் செயற்பாடு

1. மின்சுற்றுக்களில் துணைக்கூறுகளை இணைப்பதற்கு பயன்படும் முறை எது?

..........................................................................

2. பற்றாசு பிடிக்கப்பயன்படும் உலோகம் எது?

..........................................................................

**10.4 - வீட்டு மின்சாதனங்கள்**

* வேலைகளை மின்னின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படும் உபகரணங்கள் மின்சாதனங்கள் எனப்படும்.
* மின்சாதனங்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் மின்னழுத்த வேறுபாடு (V), வலு (p) என்பவற்றைக் கவனிக்க வேண்டும்.

1. மின்சாதனம் ஒன்றில் குறிக்கப்பட்டு இருக்கும் குறிகாட்டிகள் எவை?

..........................................................................

2. அவ்வாறு குறிக்கப்பட்டுள்ளமையால் ஏற்படும் அனுகூலம் ஒன்று தருக?

..........................................................................

3. மின்சாதனங்களை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக.

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

4. பின்வருவனவற்றுள் அதிக வினைத்திறனுள்ள மின்குமிழ் எது?

A) 240 V, 60 W சாதாரண இழை மின்குமிழ்
B) 240 V, 10 W சக்தி சேமிப்பு மின்குமிழ்

5. பயன்படுத்துவோருக்கும், ஏனையோருக்கும் விபத்துக்கள் ஏற்படா வண்ணம் எவ்வாறு பாதுகாப்பான முறையில் மின் சாதனங்களை பயன்படுத்தலாம்?

..........................................................................

6. மிகை ஒட்டம் என்பதால் கருதப்படுவது யாது?

..........................................................................

7. வீட்டு மின்சுற்றுக்குப் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக?

..........................................................................

**10.5 மின்னோட்டத்தின் வெப்ப விளைவு**


* அதிக தடைப்பெறுமானமுள்ள கம்பி ஒன்றினூடாக மின்னோட்டம் பாயும் போது மின்சக்தி வெப்பசக்தியாக நிலைமாறும். அதனால் கம்பி வெப்பமடையும். இது மின்னோட்டத்தின் வெப்ப விளைவு எனப்படும்.
* மின்னோட்டத்தின் வெப்ப விளைவு கடத்தியின் தடையிலும் அதனூடாகப் பாயும் மின்னோட்டத்தின் அளவிலும் தங்கியுள்ளது.
* கடத்தியின் தடைப்பெறுமானம் கூடும்போது உற்பத்தியாகும் வெப்பத்தின் அளவு கூடும்.
* கடத்தியின் தடைப்பெறுமானம் அது தயாரிக்கப்படும் திரவியத்தின் இயல்பு, கடத்தியின் நீளம், கடத்தியின் தடிப்பு என்பவற்றில் தங்கியுள்ளது.

1. மின்னோட்டத்தின் வெப்ப விளைவு என்றால் என்ன?

..........................................................................

2. ஆளியை மூடி குறிப்பிட்ட நேரத்தின் பின்னரும் மின்குமிழின் கண்ணாடிக் குமிழை தொடும் போது அவதானம் யாது?


...................................................




3. மேற்படி செயற்பாட்டில் இருந்து பரிசோதனை முடிவு யாது?

...................................................

4. பலகை ஒன்றின் மீது 30 cm இடைவெளியில் அமையுமாறு A,B,C என்னும் 3 ஆணிகள் பொருத்தி அதில் AB இற்கிடையில் செப்புக் கம்பியும், BC இற்கிடையில் நிக்குரோம் கம்பியும் இறுக்கமாக இழுத்து இணைக்கப்பட்டது.




1. ஆளியை மூடிய போது எக்கம்பி கூடுதலாக வெப்பமடைந்தது?

...................................................

2. அதற்கான காரணம் யாது?

...................................................


5. மின்னோட்டத்தின் வெப்ப விளைவு எவற்றில் தங்கியுள்ளது?

..........................................................................

6. கடத்தியொன்றின் தடைப்பெறுமானம் தங்கியுள்ள 03 காரணிகள் எவை? ...

..........................................................................

7. மின்னின் வெப்ப விளைவு பயனுள்ளதாக அமையும் உபகரணங்கள் பற்றிய கூற்றுக்கள் சரியாயின் ✓ தவறாயின் X எனவும் அடையாளம் இடுக



1. உணவு சமைப்பதற்காக மின் சோற்றடுப்பைப் பயன்படுத்தல் ( )
2. அமிழ்ப்பு வெப்பமாக்கி மூலம் நீர் கொதிக்க வைத்தல் ( )
3. சக்தி சேமிப்பு மின்குமிழ் மூலம் ஒளியைப் பெறல் ( )
4. ஆடைகளை அழுத்த மின்னழுத்தியைப் பயன்படுத்தல் ( )

8. சில மின்சாரங்களில் மின்னின் வெப்ப விளைவு பிரதிகூலமாக அமைகின்றது. அதனால் ஏற்படும் சேதத்தை தவிர்ப்பதற்கு பயன்படும் முறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................

..........................................................................

9. நிக்குரோம் எக்கலப்புலோகம் எவ்வுலோகங்களால் ஆனவை? .

..........................................................................

**10.6 மின்னின் ஒளி விளைவு**

* செலுத்தப்படும் மின்னோட்டத்தின் ஒரு பகுதி ஒளியாக நிலைமாற்றமடைதல் மின்னின் ஒளி விளைவு ஆகும். உம் : ஒளிகாலும் இருவாயி (LED)
* ஒளிகாலும் இருவாயியில் காலப்படும் ஒளியின் நிறம் அதனை உற்பத்தி செய்யும் பதார்த்தத்தில் தங்கியுள்ளது.
* சில LEDகள் பலவர்ணங்களைக் காலுகின்றன அவை பலவர்ண LED எனப் படுகிறது.
* LEDன் பயன்பாடு : 1 - அலங்காரச் சுற்றுக்களை அமைக்க,
  2 - சுற்று / உபகரணம் செயற்படுவதை பரிசோதிக்கும் காட்டி

1. ஒளியை வெளிவிடும் இருவாயி எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................


2. பலவர்ண LED எனக் குறிப்பிடப்படுவன எவை?

..........................................................................

3. LEDஇன் பயன்பாடுகள் 2 குறிப்பிடுக.

..........................................................................

4. கீழுள்ள இருவாயியில் அதன் முனைகளைக் குறிப்பிடுக.




A - ..............................

B - ..................................

5. LED ஒன்றை ஒளிரச் செய்வதற்கு அதன் முனைவுகளை மின்கலமொன்றின் எம்முனைவுகளுடன் இணைப்பீர் எனக் குறிப்பிடுக?

...................................................

6. மேற்படி ஒளிகாலும் இருவாயியின் குறியீட்டை வரைக.

...................................................

**10.7 மின்னின் காந்த விளைவு**

* திசைகாட்டிக்கருகில் காந்தத்தைக் கொண்டு வரும் போது திசைகாட்டியின் ஊசி திரும்பலடையும் என்பதை அலகு 06ல் கற்றிருப்பீர்கள்.
* மின்பாயும் கடத்தி ஒன்றைச் சூழ காந்தப்புலம் உருவாகும்.
* மின்பாயும் கடத்தியில் காந்தப்புலம் உருவாதல் காந்த விளைவாகும். இவை தற்காலிக காந்தமாகும் (மின்காந்தங்கள்)
* மின்னோட்டத்தைக் காவும் கடத்திக்கு அருகில் திசைகாட்டி ஒன்றைக் கொண்டு வருகையில் திசைகாட்டியின் ஊசி திரும்பலடையும்.
* மின்காந்த வலிமையை அதிகரிக்கச் செய்ய
  - சுருளின் மத்தியில் கடத்தியை பயன்படுத்தல்
  - சுருளினூடாக மின்னோட்டத்தை அதிகரித்தல்
  - சுருளில் சுற்றுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

1. மின்னின் காந்த விளைவு என்றால் என்ன?

..........................................................................

(07ஆம் பக்கம் பார்க்க)


ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 10


### மின்னியல்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)




2. மின்னோட்டத்தைக் காவும் கடத்திக்கு அருகில் திசைகாட்டி ஒன்றைக் கொண்டு வருகையில் திசைகாட்டியின் ஊசி திரும்பலடைந்தமைக்கான காரணம் யாது?
......................................................................................................

* மின்னின் காந்தவலிமையைப் பரிசோதிப்பதற்கான பரிசோதனை அமைப்புக் காட்டப்பட்டுள்ளது





3. காவலிடப்பட்ட செப்புக்கம்பி சுற்றப்பட்ட அணிக்கு மின் வழங்கும் போது உமது அவதானம் யாது?
......................................................................................................
4. அதற்கான காரணம் யாது?
......................................................................................................
5. இப்பரிசோதனை அமைப்பில் ஆணியை அகற்றி சுற்றிற்கு மின்னை வழங்கும் போது கவரப்படும் குண்டூசிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் யாது?
......................................................................................................
6. மீண்டும் ஆணியைச் செருகி மின்கல எண்ணிக்கையை அதிகரிக்கும் போது கவரப்படும் குண்டூசிகளின் எண்ணிக்கைக்கு யாது நிகழும்?
......................................................................................................
7. மேலும் குண்டூசிகள் கவரப்படும் எண்ணிக்கையை அதிகரிக்க சுற்றில் ஏற்படுத்தக்கூடிய மாற்றம் யாது?
......................................................................................................
8. இங்கு உருவாகும் மின்காந்தம் தற்காலிகமானதா / நிரந்தரமானதா?
......................................................................................................
9. மின்காந்தத்தின் வலிமையை அதிகரிக்கக் கூடிய முறைகள் 3 தருக?
......................................................................................................
10. மின்காந்தம் உபயோகிக்கப்படும் மின் உபகரணங்கள் 4 தருக?
......................................................................................................

**10.8 மின்னின் இரசாயன விளைவு**

படத்திலுள்ளவாறு ஐதான ஐதரோக் குளோரிக்கமிலம் சிறி தளவு உள்ள முகவையுள் சிறிய நாகத்தகட்டை இட்டு அவ தானிக்கவும்.




1. மேற்படி பரிசோதனையிலிருந்து நீர் பெறும் 2 அவதானங்கள் யாது?
......................................................................................................
2. மேற்படித் தாக்கம் எவ்வகைத் தாக்கம் என குறிப்பிடுக
......................................................................................................
3. செப்புத்தகடுகள் அல்லது காபன் கோல்கள் இரண்டை உலர்கலங்களின் இரு முடிவிடங்களுடன் தொடுக்கவும். அதனை படத்திலுள்ளவாறு அமிலம் துமிக்கப்பட்ட நீரினுள் அமிழ்த்தவும்.




1. உமது அவதானம் யாது?
......................................................................................................
2. இச்செயற்பாட்டில் ஏற்பட்ட சக்தி நிலை மாற்றத்தைக் குறிப்பிடுக.
......................................................................................................
3. மேற்படி தோற்றப்பாடுகள் எவ்வாறு அழைக்கப்படும்?
......................................................................................................
4. அமிலம் துமிக்கப்பட்ட நீர் என்பதால் கருதப்படுவது யாது? ......................................................................................................
5. அமிலம் துமிக்கப்பட்ட நீர் பயன்படக் காரணம் யாது?
......................................................................................................
6. மின்கலங்களை அகற்றி தொடுப்புக் கம்பியின் முனைகளை தொடுப் பின் உமது அவதானம் யாது? ......................................................................................................
7. அதிலிருந்து நீர் எடுக்கும் முடிவு யாது? ......................................................................................................
8. மேற்படி காபன் கோல்களின் விசேட பெயர் யாது? ......................................................................................................

**மின்முலாமிடல்**

4. மின்னின் இரசாயன விளைவைப் பயன்படுத்தி உலோ கத்தாலான பொருளின் மீது உலோகங்களைப் படலிடும் முறை ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.




1. மேற்படி முறை எவ்வாறு அழைக்கப்படும்?
......................................................................................................
2. மின்முலாமிடல் பயன்படும் சந்தர்ப்பங்கள் 3 தருக.
......................................................................................................
3. கல்வனைசுபடுத்தல் என்றால் என்ன?
......................................................................................................
4. இரும்பினாலான கரண்டி, முள்ளுக்கரண்டி, கத்தி, சமையலறை உபகரணங்கள் என்பவற்றின் மீது குரோமியம், நிக்கல் போன்ற உலோகங்கள் முலாமிடுவதற் கான காரணங்கள் எவை?
......................................................................................................
5. இரும்புக் கரண்டியின் மீது படியும் பதார்த்தம்நஉலோகம் எது?
......................................................................................................

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 10

### மின்னியல் - விடைகள்

1. கடத்தியூடாக மின்னேற்றங்களின் பாய்ச்சல் மின்னோட்டம் எனப்படும்.
2. மின்னோட்டம் பாயும் மூடிய பாதை மின்சுற்று

10.1 A

1. மின்குமிழின் பிரகாசம் படிப்படியாக அதிகரிக்கும்
2. மின்குமிழுக்கு வழங்கப்படும் மின்னழுத்த வித்தியாசம் அதிகரித்து மின்னோட்டம் அதிகரிப்பதால்
3. தொடர் இணைப்பு
4. ஒரு மின்கலத்தின் மறை முடிவிடத்தை மற்றைய கலத்தின் நேர் முடிவிடத்துடனும் தொடுக்க வேண்டும்.
5. மின்கலவடுக்கு (பற்றரி)

B

1. ஒரேயளவான பிரகாசத்துடன் ஒளிரும்
2. மின்குமிழினூடாக செல்லும் மின்னோட்டத்தின் அளவு சமமானது.
3. அனைத்து நேர்முடிவிடங்கள் ஒன்றாகவும் மறைமுடிவிடங்கள் அனைத்தும் ஒன்றாகவும் இணைக்கப்பட வேண்டும்
4. சமாந்தரத் தொடுப்பு
5. சமாந்தரமான மின்கலத் தொகுதி
6. சமாந்தரத் தொடுப்பு / சமாந்தரமான மின்கலத் தொகுதி

C

1. அமைப்பு 1) பிரகாசம் அதிகம், அமைப்பு 2) பிரகாசம் குறைவு
2. மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்
3. மின்குமிழ்களின் தொடரான இணைப்பு / தொடுப்பு

D

1. ஒரேயளவான பிரகாசம்
2. மின்குமிழ்களின் சமாந்தரமான இணைப்பு / தொடுப்பு

10.2

1. தொடரான இணைப்பில்
2. குறைவான மின்சக்தியை நுகர்வதால் நீண்ட காலத்திற்கு மின்கலங்களைப் பயன்படுத்தலாம்
3. 1)ஆளி 2)மின்கலங்கள்
4. 4) நேர்முனைவு 5) மறைமுனைவு

10.3 1. A - தட்டுச் சாவி B - செருகு சாவி

2.
   1. நன்கு பிரகாசத்துடன் ஒளிரும்
   2. மின்குமிழின் பிரகாசம் சற்றுக் குறைந்தது.
   3. மின்குமிழின் பிரகாசம் இன்னும் சற்றுக் குறைந்தது.
   4. மின்குமிழின் பிரகாசம் குறையும்
   5. தடை அதிகரிக்கும் போது மின்னோட்டம் குறையும்

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.**

## வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலருக்கு 23 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிப்பு

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திர னின் மெய்ப்பாதுகாவலரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்ற நீதிபதி றிஸ்வான் உத்தரவிட்டார்.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியா ழேந்திரன் வீட்டுக்கு முன்னால் அவரது மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை மட் டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரால் முன்வைக்கப்பட்ட கருத் துக்களின் அடிப்படையில் கண் கண்ட சாட்சியாக இருக்கும் ஒருவரின் வாக்கு மூலத்தில் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்ற காரணத்தாலும் வழக்கு விசாரணை யில் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

பொலிஸார் குறித்த வழக்கு விசாரணை யில் சரியான தடயங்கள் வழங்கப்படாத காரணத்தாலும் குறித்த வழக்கை பிறிதொரு பொலிஸ் பிரிவுக்கு வழங்க கோரியிருந்த னர். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரால் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் புலனாய்வுத் துறையினருக்கு மேற்படி வழக்கு விசார ணையை கையளிக்க முடியாததால் இந்த வழக்கு விசாரணையை பொலிஸ்மா அதி பர் புலனாய்வுத் துறையினருக்கு வழங் குவதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபரால் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பொலிஸ்மா அதிபர் தலைமையில் மேற்படி வழக்கு விசாரணையை புலனாய்வுத் துறையி னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் மாதம் 21 ஆம் திகதி 34 வயது மதிக்கத்தக்க பாலசுந்தரம் எனும் இளைஞன் இராஜாங்க அமைச்சர் வியா ழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் சுட்டு கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 95

**284. மாநில - மத்திய கட்சிகளின் தேர்தல் அரசியலா, போரைப் பாதித்தது?**

பெருமளவில் அவைதான். விடுதலைப்புலிகளுக்கு எதிரானவை என்பதில் இந்தியாவோ, அமெரிக்காவோ ஒத்த கருத்தில் இருந்தன - ஸ்ரீலங்காவை தங்கள் வட்டத்துக்குள் வைத்துக் கொள்ளும் விதமாக. ஆனால் இந்திய - ஸ்ரீலங்கா உறவு ஓடும் புளியம்பழமும் போல. அநேக நேரம் சடுகுடு ஆட்டமாக இருக்கும். மத்திய அரசு தாங்கள் முழுக்க ஆதரவு கொடுத்து, ஆயுதங்களும் தந்து, போரை முன்னெடுப்பதாகக் காட்டினால் தமிழ் நாட்டில் வாக்காளர் ஆதரவு குறையும் என்று அடக்கி வாசித்து, வாய்ப்பந்தல்கள் போட்டது. பின் நாள்களிலும், போரின் உச்சக் கட்டத்தில் - 2 மார்ச் 2009 இல் - மக்களைப் பாதுகாக்க என்று கேட்கப்பட்ட போர் நிறுத்தத்தை மத்திய அரசுக்காக சிதம்பரமும் தி.மு.கவின் கனிமொழியும் முன்னெடுத்தார்கள்.

ஆனால் இதனை காங்கிரஸுக்கு எதிராக இயங்கிய நெடுமாறன், கோபாலசாமி போன்றோர் ஏற்கக் கூடாது என்று புத்திமதி கூறினர் எனவும், புதிய தேர்தல் முடிவுகள் வரும் வரை பொறுத்தால் புதிய அரசு ஊடாக போர் நிறுத்தப்பட்டு, மாற்றங்கள் வரும் என்று எதிர்பார்த்தார்கள் எனவும் கூறப்பட்டது. அரசுகள் மாறின. ஆனால் மத்திய அரசு கடைப்பிடித்த கொள்கைகள் மாறவில்லை.

நோர்வே பேச்சுவார்த்தைகள் தொடங்கிய நாள்களிலும், அது சில இக்கட்டுக்களைச் சந்தித்த நேரங்களிலும், இந்தியா பின்னணியிலிருந்து தீர்வு நோக்கிய நகர்வுகளையே ஆதரித்து வந்தது. இந்த இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சரியானதல்ல. வெற்றி என ஒன்று வந்தாலும் அது அமைதியை தரக் கூடியதாக இருக்காது என்றும் அறிவுரைகள் தந்தது.

2009இல் மஹிந்த இந்தியாவை ஆயுத உதவிகளுக்கு அணுகியபோது கனரக ஆயுதங்களோ, உயிர் சேதம் விளைவிக்கக் கூடியவற்றையோ தர முடியாது, ஆனால் வேவு பார்க்கும் ராடர் போன்ற கருவிகளை தர ஒத்துக் கொண்டது.



ஆனால் பேச்சுவார்த்தைகளை முறிக்கத் திட்டமிட்டு, ஆயுதங்களும் ஆதரவுகளுக்கு தேடும் மேலதிக முயற்சியில் ஈடுபட்டபோது மஹிந்த சீண்டுதல் பாதைகளையே காய் நகர்த்த பாவித்தார். தனது போருக்கு எதிராக இந்தியாவும் மேலைத்தேய நாடுகளும் மனித உரிமை மீறல்களைத் தான் தூக்கிப் பிடித்துக் கஷ்டங்கள் தரும் என்று கணக்கெடுத்தால் அவற்றுக்கு எதிராக ஒரு திரையை அமைக்க முன்னெடுப்புக்கள் செய்தார்.

அதேசமயம் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவுகள் மனித உரிமை அடிப்படைகளில் மேலைத்தேய நாடுகளிலிருந்தே அவர்களது புலம்பெயர் அமைப்புகளின் ஈடுபாடுகளால் வந்து கொண்டிருந்தன என்பதையும் அவர் அறிந்திருந்தார். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் சீனா, ஈரான், லிபியா போன்ற நாடுகளுடன் நட்புறவைப் பலப்படுத்தினார். இவற்றால் லிபியா, ஈரான், ஜப்பான், சீனா, ரஷ்யா என்பன பொருளாதார உதவிகள் செய்தன. செக் குடியரசு இடம் இருந்து பலவித கனரக ஆயுதங்களை இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கு, ரஷ்யா உதவி செய்தது. ஈரான், பாகிஸ்தான், சீனா போன்றவை



சர்வதேச அரங்குகளில் ஸ்ரீலங்காவிற்கு ஆதரவாகப் பேசியமை மட்டுமன்றி ஆயுத உதவிகளும் செய்தன. அதேபோல் இஸ்ரேலும் வசதியான வழிகளில் ஆயுதங்கள் தர ஒத்துக்கொண்டது. மேலும் ஜோர்டான், பர்மா, வியட்நாம் போன்ற நாடுகளோடு வியாபாரங்கள் பெருக்கப்பட்டன. ஓரளவுக்கு நடுநிலையில் நின்ற அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இந்த கூட்டுறவுகளும் மஹிந்த சீனாவின் அலகில் இயங்குவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இந்தியக் கடல் பிராந்தியத்தில் தங்களுக்கு உரிய மேலாண்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் விடுதலைப் புலிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் அவர்களைக் கைவிடுவது என்ற தீர்மானத்துக்கு வந்தனர்.

படிப்படியாக இந்தியாவின் சொல்லாடல்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

**285. எப்படியான விதங்களில்?**

நவம்பர் 2006இல் பிரபாகரனின் மாவீரர் தின பேச்சுக்காலத்தில் மன்மோகன் சிங்கின் தூண்டுதலில் சிவசங்கர் மேனன், ஸ்ரீலங்காவிற்கு இரண்டுநாள் பயணம் மேற்கொண்டு, ஒரு பாரிய மனித அவலம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உருவாகின்றன எனக் குறிப்பிட்டு மஹிந்தாவை இந்தியாவிற்கு வருவதற்கு அழைப்பு தந்தார். 29 நவம்பர் 2006, மஹிந்தா இந்தியா சென்றபோது அவருடன் அப்போதைய வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீரவும் இருந்தார். அவர்கள் இந்திய கடற்பிராந்தியத்தில் இரு நாடுகளும் ஒன்று சேர்ந்து ரோந்து செய்ய ஆவன செய்யுமாறு கேட்டும் ஒத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் உயிர்ச் சேதங்கள் பாரிய அளவில் விளைவிக்காத ஆயுதங்கள் தர ஒப்புக் கொள்ளப்பட்டன. அந்த தருணத்திலும் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இராணுவத் தீர்வு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையாது என்று அறிக்கைகள் தந்தார்.

இடையில் மஹிந்த தான் சர்வகட்சி மாநாடு கூட்டி அதிகாரப் பரவலுக்குத் தீர்வு காணுவேன் என்று அறிவித்தபோது இந்தியாவின் வெளிநாட்டு காரியதரிசி சயாம் சர்மா ஸ்ரீலங்கா சென்று ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இருபக்கத்தாரோடும் பேசி ஒத்துழைப்பு தந்து அதிகாரப் பரவலை நடத்துமாறு அறிவித்து, இருபக்கத்தினரையும் புதுடில்லிக்கு அழைத்து தொடரும் வன்முறைகளால் ஸ்ரீலங்கா சீனாவிற்கு அனுசரணைகள் செய்வது, பிராந்திய பாதுகாப்புக்கு ஏற்றதல்ல என அறிவுறுத்தப்பட்டது.

ஆனால் அவர்கள் அங்கிருக்க, ஆயுதக் கொள்வனவுக்காக சஜின் வாஸ் குணவர்த்தனாவையும் இராணுவ அதிகாரிகளையும் மஹிந்த சீனாவிற்கு அனுப்பினார். அது ஒரு வழியில் புதுடில்லிக்கு அழுத்தம் கொடுக்கச் செய்யப்பட்டதாக பார்க்கப்பட்டதால், மன்மோகன் சிங் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டமையைச் சுட்டிக்காட்டி, இது இரண்டு இறைமையுள்ள நாடுகளிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் சம்பந்தப்பட்டதால், சர்வதேச சட்டங்களுக்கு ஆட்படும், ஆகவே ஒரு பகுதி அதனை தனது தேசிய சட்டங்களுக்கு ஆட்படுத்தி பிரிப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்படாது என்றும் தெரிவித்தார். ரணில் தான் தன்னால் முடிந்த வரையில் அதிகாரப் பரவலுக்கு ஒத்துழைப்பேன் என உறுதி தந்தார்.

**286. ஆனால் மஹிந்த அவைகளை ஏற்றுக் கொண்டாரா?**

அவர் இவற்றைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. தான் சீனா என்ற மீனைத் தூண்டிலில் போட்டிருக்கிறேன். இந்தியாவின் நலத்தை கைவிட மாட்டேன் என்ற பரப்பலை முன்னெடுத்து 'இந்தியா எங்களது முதல் நண்பன், அதைக் கேட்டுதான் எதையும் செய்கிறோம்' என்ற ஆப்பை இறுக்கமாக அடித்தார். இந்த ஆப்புக்கள் பலமான பல இடங்களில் அடிக்கப்பட்டு டிசெம்பர் 2007இல் பிரிகேடியர் ஜீமால் லியனகே இந்தியாவைப் பற்றி தாங்கள் எடுத்த கணக்கை இப்படியாக சொன்னார்.

இந்தியா இந்தப் போரில் பெரியதொரு பங்கு வகிக்கும் என்பதை நாங்கள் தொடக்கத்திலிருந்தே கணித்திருந்தோம். பல பேர் சர்வதேசம் என்று கூறுகிறார்கள். ஆனால் நாங்களோ இந்தியாவை மேவி சர்வதேசம் என்று ஒன்றைக் கணக்கெடுக்கவில்லை. இந்தியா ஒரு வல்லரசாக மாறி வருகிறதென்பதை நாங்கள் உணர்ந்தோம். அது ஒரு பெரிய பொருளாதார வளத்தையும், இராணுவ வளத்தையும் கட்டியெழுப்பி ஆதிக்கம் செலுத்தக்கூடியதாக மாறியிருக்கிறது. அவர்கள் இப்படி ஒரு வல்லரசாக மாறும்போது தாங்கள் பாதுகாப்பை அவர்கள் கருத்திற்கொள்வது விளங்கிக் கொள்ளக் கூடியதே. தங்கள் சுற்றாடலில் என்ன நடக்கிறது என்பதை பற்றி அவர்களுக்கு அக்கறை இருக்கும். அப்படியான அவர்களின் ஆதங்கங்களை நாம் மதிக்கிறோம். இவற்றால் ஜனாதிபதி மஹிந்த அவர்களுடன் மிக சிறந்த உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அவர் இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு தருவேனென இந்தியாவிற்கு வாக்களித்து உள்ளார். இவற்றால் மஹிந்த யுத்த நிறுத்த ஒப்பந்தங்களைக் கணக்கெடுக்காது போரில் கவனம் செலுத்தினார். அவற்றைத் தொடர்ந்து இந்தியா, தாங்கள் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான ஆதரவை தருவதாக வெளிப்படையாக உறுதியளித்தது. அது ஸ்ரீலங்காவில்



மாத்திரமல்ல, அந்தப் பிராந்தியத்திலும் அதற்கான அக்கறைகள் எடுப்போம் என்றும், இந்தப் பின்புலத்தில் இந்திய - ஸ்ரீலங்கா உறவுகள் அப்போது போல் எப்போதும் இருந்ததில்லை எனவும், அதன்பின் பாதுகாப்பு செயலாளர் சிவசங்கர் மேனன் 17 ஜனவரி 2009இல் மஹிந்த முன்னிலையில் அறிவித்தார்.

(வளரும்....)

# சுகாதாரத்துறை சார்ந்த அனர்த்தம் ஒன்றுக்கு அத்துறையே தலைமைத்துவம் வழங்க முடியும்!

## அதிகாரி ஒருவரின் ஆதங்கம்

*வி.ரி.சகாதேவராஜா*

பாரிய சுகாதாரம் சார்ந்த அனர்த்தம் ஒன்று நடைபெறுகின்ற நிலையில் சுகாதாரத் துறையினர்தான் அதற்குரிய தலைமைத்துவத்தை கொடுக்கமுடியும். எல்லா நாடுகளிலும் அதுதான் நடைபெறுகிறது. துறைசார்ந்த நிபுணத்துவ தேவையும் அதுதானே.

பல தடவைகளில் சுகாதாரத் துறையினர் அதை கூறியபொழுது ஒவ்வொருவராக தூக்கி எறியப்பட்டதும் ஏனையவர்கள் பேசா மடந்தையாக ஒதுங்கி கொண்டோம்.

அதிகாரங்கள் ஓர் இடத்தில் குவிக்கப் பட்டதன் பாரதூரமான விளைவுகளை நாம் எதிர்கொண்டோம். தனிப்பட்ட ரீதியில் ஆறு மாதத்துக்கு முன்னர் இரண்டாம் அலை தொடக்கத்தில் தைரியமாக Home based management for asymptomatic patients Home based management for asymptomatic patients சம்பந்தமாக உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கதைக்க முயற்சித்த வேளை தட்டிக்கழிக்கப்பட்டது.

இன்றுகூட அழிவு நிலையில் நமது நாடு இருந்தாலும் முடிவு எடுக்கின்ற விடயங்களில் அரசாங்கம் சுகாதாரத்துறையினரின் ஆலோசனைகளை உள்வாங்க வேண்டும்.

1. அறுபது வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்பட்டு மூன்று வாரம் கடக்கும் வரை கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அதிகூடியதாக இன்னும் 5 வாரங்கள்.

2. தடுப்பூசி எடுக்காதவர்கள் சலுகைகள் அனைத்தும் நிறுத்தவேண்டும்

3. அனைத்து ஒன்றுகூடல்களையும் நிறுத்த வேண்டும்.

4. சுகாதார நடைமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக சலுகைகள் முடக்கம் சட்டம் கொண்டுவர வேண்டும்.

5. எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற பேதமின்றி தெளிவான தனிமைப்படுத்தல் சட்டமூலமொன்றைக் கொண்டு வந்து சுகாதாரத் துறையினரை சக்தி மிக்கவர்களாக மாற்றி சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டும்.

அல்லது அழிவின் விளிம்பில் இருந்து நாங்கள் பாதாளத்தை நோக்கி வீழ்ந்து விடுவதுதான் தவிர்க்க முடியாததாக இருக்கும். இவ்வாறு கூறுகிறார் சுகாதாரத்துறையின் உயரதிகாரி ஒருவர்.

கருத்துச்சரியென்றால் ஏற்றுக்கொள்வதுதானே சிறந்த முறை.

அதேவேளை கொவிட் தொடர்பான சில தெளிவூட்டல்கள் ஆலோசனைகளையும் அவர் முன்வைத்தார். அவற்றை சுருக்கமாகத் தருகிறோம்.

கொவிட் உண்டென்பதை எவ்வாறு அறிதல்?

**உங்களுக்கு கொவிட் 19 இருக்கிறதா என்று எப்படித் தெரியும்?**

தொண்டை அரிப்பு, வறண்ட தொண்டை, வறட்டு இருமல், உயர் வெப்பநிலை, மூச்சுத் திணறல் மற்றும் சுவை இழப்பு போன்ற குணங்குறிகளைக் காட்டும். அப்படிக்காட்டினால் சந்தேகமேயில்லை. உடனடியாக சிகிச்சையை நாடவேண்டும்.

**டெல்டா வைரஸ்**

★ அதிக காய்ச்சல், இருமல், கடுமையான உடல் வலி, வாயில் கசப்பு, சுவை இழப்பு போன்ற அறிகுறிகள் இலங்கை முழுவதும் பரவலாக உள்ளன.

★ தயவுசெய்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

★ குளிர்ந்த நீரைத் தவிர்க்கவும்.

★ குளிர்ந்த பானங்களைப் பயன்படுத்துவதை முற்றிலும் நிறுத்துங்கள்.

★ வெந்நீர் குடிக்கவும்.

★ சூடான நீரில் சுவாசிக்கவும்.

★ முட்டைகளை சாப்பிடுங்கள்.

★ அத்திப்பழம் சாப்பிடுங்கள்.

★ பாதாம் பருப்பு சாப்பிடுங்கள்.

★ கராம்பு, ஏலக்காய் மற்றும் கறுவாப் பட்டை சேர்த்து காபி குடிக்கவும்.

★ ஆட்டு சூப் குடிக்கவும், கறுப்பு, மிளகு, இஞ்சி மற்றும் மஞ்சள் சேர்க்கவும்.

★ நாட்டுக் கோழி சூப் குடிக்கவும், மிளகு, இஞ்சி மற்றும் மஞ்சள் சேர்க்கவும்.

★ கல்சியம் நிறைந்த உணவுகள் அல்லது கல்சியம் மாத்திரைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

★ நிறைய தண்ணீர் குடிக்கவும்.

★ அடிக்கடி கராம்புகளை உங்கள் வாயில் போட்டு 5 நிமிடங்கள் மெல்லுங்கள்.

**நோய்த்தொற்று ஏற்பட்டால்...**

நோய்த்தொற்று ஏற்பட்ட 3ஆவது நாளிலிருந்து அறிகுறிகள் தோன்றும். அறிகுறிகளுடன் நாள்களின் எண்ணிக்கையை எண்ணுவது மிகவும் முக்கியம்.

**முதல் கட்டம்.**

இது 01 ,02 மற்றும் 03 நாள் வரை நீடிக்கும்

அப்போது, உடல் வலிகள், கண் வலி, தலைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, மூக்கு சிதைவு அல்லது நாசி நெரிசல், கண்களில் எரியும், சிறுநீர் கழிக்கும் போது எரியும், காய்ச்சல் உணர்வு, தொண்டை வலி போன்ற குணங்குறிகளைக்காட்டும். அப்படிக்காட்டினால் சந்தேகமேயில்லை. உடனடியாக சிகிச்சையை நாடவேண்டும்.

**என்னசெய்யலாம்?**

நிறைய திரவங்களை குறிப்பாக தூய நீரைக் குடிப்பது முக்கியம்.

**இரண்டாவது நிலை**

4 ஆவது முதல் 8 ஆவது நாள் வரை நீடிக்கும். சுவை அல்லது வாசனை இழப்பு. குறைந்த முயற்சியுடன் சோர்வு, மார்பு வலி, விலா எலும்புகளை இறுக்குவது. சோர்வுக்கும் மூச்சுத் திணறலுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நபர் எந்த முயற்சியும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும்போது மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. சோர்வு என்பது ஒரு நபர் எளிமையான ஒன்றைச் செய்யத் தூண்டுவதாகும். கொவிட் 19 ஒட்சிசனை பிணைக்கிறது. எனவே, இரத்தத்தின் தரம் மோசமாக உள்ளது மற்றும் ஒட்சிசன் குறைவாக உள்ளது.

**நிலை 3 - குணப்படுத்துதல்**

9 ஆவது நாளில் தொடங்கி 14 ஆவது நாள் வரை நீடிக்கும். இந்த பரிந்துரைகளை வைத்திருப்பது நல்லது.

குறைந்தது 07-08 மணிநேரம் ஓய்வெடுங்கள். அனைத்து உணவுகளும் சூடாக இருக்க வேண்டும்.

கொரோனா வைரஸின் PH 5.5 முதல் 8.5 வரை இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், எனவே வைரஸை அகற்ற நாம் செய்ய வேண்டியது வைரஸின் அமில நிலைக்கு அதிக அமிலத்தன்மை கொண்ட உணவுகளை சாப்பிடுவதுதான்.

★ வாழைப்பழ சுண்ணாம்புக்கு 9.9 PH உள்ளது.

Lemon மஞ்சள் எலுமிச்சையில் 8.2 PH உள்ளது.

Voc வெண்ணெய் பழத்தில் 15.6 PH உள்ளது.

பூண்டு PH 13.2 உள்ளது.

★ மாம்பழத்தின் மதிப்பு 8.7 PH.

Arin மாண்டரின் pH 8.5 ஆகும்.

அன்னாசிப்பழத்தில் 12.7 PH உள்ளது.

ஆரஞ்சு நிறத்தில் 9.2 PH உள்ளது.

## தமிழ் ஊடகத்துறையின்.....

*(05ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நான் மேலே குறிப்பிட்டவை அவர் சொன்ன வார்த்தைகள் அல்ல. அவர் அன்று கூறிய விடயங்கள் தொடர்பில் என் மனதில் பதிந்த பதிவுகளின் தொகுப்புதான் அவை. அலுவலகத்தில் அத்தனை சிரேஷ்ட ஆசிரியர் பீட உறுப்பினர்கள் இருக்கையில் கற்றுக் குட்டியான என்னை அழைத்து, பட்டம் பெற்று வெளியேறும் பல்கலைக்கழக மாணவனுக்கு விரிவுரையாளர் உபதேசம் செய்வது போல ஆசிரியர் ஏன் உபதேசம் செய்கின்றார் என்பது புரியாமல் நான் தடுமாறினேன்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்தினால் – ஆசிரியர் கடுமையாக நடந்து கொண்டமையினால் – இப்போது சந்தர்ப்பம் பார்த்து ஆசிரியர் இப்படி எனக்கு உபதேசிக்கின்றார் என்று எனக்கு தோன்றியது.

ஆனால் அடுத்த பல தசாப்தங்கள் மிகுந்த நெருக்கடிக்குள் நான் ஆற்றப் போகின்ற பணிக்கு – வேலைக்கு – எனக்கு நானே அமைத்துக்கொள்ள வேண்டிய பாதைக்கான வரைபடத்துக்கு ஐயா கூறிய விளக்கம்தான் அன்றைய 'லெக்சர்' என்பதை இப்போது நான் உணர்ந்தும் புரிந்தும் கொண்டுள்ளேன்.

அதைச் சற்று விரிவாகப் பார்ப்பதற்கு இந்த விரிவுரைக்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் நடந்த – எனக்கு இழைக்கப்பட்ட அநீதியாக நான் அப்போது கசப்புணர்வுடன் கருதிய – உண்மையில் அது ஆசிரியர் உரிமையுடன் எனக்குச் செய்த நீதியான செயல் என்று நான் இப்போது உணர்கின்ற – அந்தச் சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வது முக்கியம். அதை நாளை பார்ப்போமா நண்பர்களே...?

(வளரும்.....)

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பத்துக்கு சமுர்த்தி நிதியில் இராணுவத்தால் புதியவீடு

யாழ்ப்பாணம், ஓக.11

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பமொன்றுக்கு சமுர்த்தி அபிவிருத்தி வங்கியினுடைய பூரண நிதியனுசரணையில் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் புதிய வீடொன்று வழங்கிவைக்கப்பட்டது.

குறைந்த வருமானத்தை பெறுகின்ற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக சமுர்த்தி அபிவிருத்தி வங்கியினுடைய பூரண நிதியனுசரணையில் 'தலைக்கு நிழல்' எனும் வீட்டுத்திட்டத்தின் கீழ் 55 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஜயவர்த்தனவின் அழைப்பின் பேரில் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜென்ரல் ஜெகத் கொடித்துவக்குவின் தலைமையில் மருதங்கேணி பிரதேசத்தில் வசிக்கும் துஸ்யந்தன் ஜுடி ரொபினி குடும்பத்தினருக்கு புதியதொரு வீடு வழங்கிவைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்படி குடும்பத்தினருக்கான உலருணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் மற்றும் குடும்பத்திலுள்ள கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த வீடு 553ஆவது படைப்பிரிவினுடைய படைத்தளபதியினுடைய நெறிப் படுத்தலின் கீழ் 10 ஆவது விஜயபாகு காலாட் படையணியினரின் சரீர ஒத்துழைப்பிலும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்கு 55 ஆவது படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி, யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தலைமை பிரிக்கேடியர் நிலை அதிகாரி, மருதங்கேணி பிரதேச செயலர், 552 மற்றும் 553 ஆவது படைப்பிரிவுகளின் படைத் தளபதிகள், இராணுவ உயரதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# மரணம் தொடர்பில் அரசின் புள்ளிவிவரங்கள்மீது நம்பிக்கையில்லை என்கிறார் சம்பிக்க ரணவக்க



நாட்டில் தற்போது லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே சம்பிக்க ரணவக்க இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் முன்வைக்கும் கொரோனா மரணங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் தொடர்பில் எவ்வித நம்பிக்கையும் இல்லை.

அரசாங்கத்தின் புள்ளிவிவரங்கள் தொடர்பிலும் நம்பிக்கையில்லை என விசேட மருத்துவ நிபுணர்கள் கூடக் கூறியுள்ளனர்.

உண்மையான மரணங்கள் தொடர்பான உண்மையான புள்ளிவிவரங்களை வெளியிடுவது எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் அரசாங்கத்தின் கடமை எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

# ரயில்வே நிலைய அதிபர்கள் உட்பட 12 ஊழியர்களுக்கு கொவிட் தொற்று

ரயில்வே கட்டுப்பாட்டு அலுவலகத்தின், ரயில்வே நிலைய அதிபர்கள் மற்றும் கடைநிலை ஊழியர்கள் உட்பட 12 ரயில்வே திணைக்கள ஊழியர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ரயில் சேவையைப் பராமரிப்பது கடினமாகியுள்ளதாக இலங்கை ரயில்வே நிலைய அதிபர்கள் தெரிவித்துள்ளனர். கொவிட் தொற்று காரணமாக, தொடர்புடைய நிலைய அதிபர்கள் மற்றும் ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அதன்படி, களுத்துறை, இந்துருவ மற்றும் கொலன்னாவ ரயில் நிலையங்களில் ஊழியர்களின் கொவிட் தொற்று காரணமாக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில், ரயில்வே ஊழியர்கள் தமது சேவைகளை வழங்குவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன எனவும் ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# கொவிட்டால் உயிரிழந்த 1,437 பேர் ஓட்டுமாவடியில் இதுவரை அடக்கம்

## தவிசாளர் ஏ.எம். நௌவ்பர் தகவல்



மட்டக்களப்பு ஓட்டுமாவடி சூடுபத்தினசேனையில் கொவிட் தொற்றில் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்கள் மற்றும் உடல்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை 1,437 பேர் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை நாளாந்தம் 25 இற்கு மேற்பட்ட உடல்கள் வந்த வண்ணமுள்ளமையால் இனிவரும் நாள்களில் உடல்கள் அடக்கம் செய்ய இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என ஓட்டுமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌவ்பர் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களின் ஜனாஸாக்கள் மற்றும் உடல்களை அடக்கம் செய்ய அடையாளப்படுத்தப்பட்ட ஒரே ஓர் இடம் ஓட்டுமாவடி பிரதேச சபை எல்லைக்குள் உள்ள பகுதியான மஜீமா நகர் சூடுபத்தினசேனை பிரதேசமாகும்.

இந்த பொது மயானத்திலே இந்த உடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுவருகின்றன. இதனை எமது சபை பொறுப்பேற்று மனித வலு, இயந்திர வலு என்பவற்றைப் பயன்படுத்தி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இதற்கு இராணுவத்தினர், சுகாதாரப் பணியாளர்கள் ஒத்துழைப்புக்களை வழங்கிவருகின்றனர்.

இந்த நிலையில் இந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு 3 ஏக்கர் காணியை அடையாளப்படுத்தி அதில் உடல்கள் அடக்கம் செய்துவந்த நிலையில் இந்தக் காணி போதாது என அதனுடன் இணைந்த மேலும் இரண்டு ஏக்கர் காணியை அடையாளப்படுத்தி 5 ஏக்கர் காணியில், 40 இந்துக்கள் , 28 கிறிஸ்தவர்கள், 21 பௌத்த மதங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட 1,437 பேரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதில் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் அடையாள கற்கள் நாட்டப்பட்டு இலக்கங்கள் இடப்பட்டு அந்த இலக்கங்களின் உடல்கள் யாருடையது என்ற பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்டு பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த 5 ஏக்கர் காணியிலே இன்னும் சுமார் 500 உடல்கள் மட்டுமே அடக்கம் செய்யமுடியும். இருந்தபோதும் தற்போது கொவிட் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதால் நாளாந்தம் 25 அல்லது 30 உடல்கள் நாடளாவிய ரீதியிலிருந்து வருகின்றதன் காரணமாக இன்னும் ஒரு சில நாள்களில் இந்த இடம் முடிந்துவிடும்.

எனவே மாற்று இடத்துக்கு எங்கு செல்வது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக ஓர் இடத்தை தெரிவு செய்ய வேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் மதுபோதையில் தாக்குதல்; குடும்பஸ்தர் காயம்

## இருவர் கைது

வவுனியா மரக்காரம்பளை பகுதியில் மதுபோதையில் நின்ற நபர்கள் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை குறித்த குடும்பஸ்தர் மரக்காரம்பளையில் அமைந்துள்ள வியாபார நிலையத்துக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சென்றுள்ளார்.

இதன்போது அந்தப்பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த, உணவக உரிமையாளர் மற்றும் நபர் ஒருவரும் இணைந்து அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் காயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. தாக்குதலுடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நபர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# உலர விட்டிருந்த நெல் விசமிகளால் தீ வைப்பு



முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கருப்புள்ளியான் கிராமத்தில் அறுவடை செய்து தளத்தில் உலர விட்டிருந்த நெல்லுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு கரும்புள்ளியான் கிராமத்தில் விவசாயி ஒருவர் தான் அறுவடை செய்த நெல்லை உலர்த்துவதற்காக வைத்திருந்த சமயம் விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதனால் உலரவிடப்பட்டிருந்த நெல் எரிந்து சாம்பலாகியுள்ளது.

# திடீரென மயக்கமுற்று வீழ்ந்தனர் நான்கு பொலிஸார் குருநாகலில்

குருநாகல் வாரியபொல பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகளுக்காக கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட ஆலோசனை வகுப்பின் போது திடீரென சுகவீனமுற்ற நான்கு அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் இந்த ஆலோசனை வகுப்பை நடத்திக்கொண்டிருந்த நிலையில் வகுப்பில் கலந்து கொண்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகள் திடீரென மயங்கி விழுந்துள்ளனர். இதனையடுத்து மேலும் இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு இதேபோன்று ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்த நான்கு அதிகாரிகளும் சிகிச்சைக்காக வாரியபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையுடன் அங்கு நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் நான்கு பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியாகியுள்ளது.

வாரியபொல வைத்தியசாலையில் சேவையாற்றும் மேலும் பொலிஸாருக்கு சளி மற்றும் இருமல் இருப்பதால், அவர்கள் அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக பிரதேச சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

# அனைத்து வைத்தியசாலைகளிலும் கொவிட் சிகிச்சை வழங்கப்படும்

கொழும்பு, ஒக.11

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் இந்த வாரத்துக்குள் கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்றப்படும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவர் வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள், தங்களுக்கு, உடல்நிலை சரியில்லை என்றதும், மருத்துவ உதவியை பெற சிறிது தயக்கம் காட்டுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் அண்மையில் பகிரப்பட்ட காணொலிகள் மற்றும் படங்கள் காரணமாக வைத்தியசாலைகளில் மருத்துவ உதவி பெறுவதில் பொதுமக்கள் பீதியடைந்திருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுமக்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வைத்தியசாலையில் ஏற்படும் நெரிசலுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்ல பயப்பட வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், டெல்டா மாறுபாடு இலங்கையில் காட்டுத்தீ போல் பரவி வரும் சூழ்நிலையில், மக்கள் பெரிய கூட்டங்களுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டியது அவசியம் என்று வைத்தியர் குணசேனா அறிவுறுத்தியுள்ளார்.

# இலங்கைப் பயணிகளுக்கு தளர்வு அறிவித்தது பிரான்ஸ்

பிரான்ஸ், அதன் நுழைவு நிலைகளில், இலங்கையை செம்மஞ்சள் மண்டலத்தில் வகைப்படுத்தி, சுகாதார நெறிமுறைகளுக்கு உட்பட்டு, இலங்கையர்கள் தமது நாட்டுக்கு வர முடியும் என்று அறிவித்துள்ளது.

பிரான்ஸ் தூதரக இணையத்தளத்தின்படி, இலங்கை செம்மஞ்சள் மண்டலத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

பைஸர், மாடர்னா, அஸ்ட்ராஜெனெகா மற்றும் கொவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகளை முழுமையாக செலுத்திக்கொண்டவர்கள், இரண்டாவது அளவை செலுத்திய இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நாட்டுக்குள் நுழையலாம்.

மேலும், ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசி மூலம் தடுப்பூசி போடப்பட்டவர்கள் தங்கள் இரண்டாவது அளவுக்கு பின்னர் நான்கு வாரங்கள் கழித்து நாட்டுக்குள் பிரவேசிக்கலாம்.

எனினும் ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசி இன்னும் இலங்கையில் அவசரப் பயன்பாட்டுக்கு அங்கீகரிக்கப்படவில்லை.

முழுமையாகத் தடுப்பூசி போடப்படாதவர்கள் பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் சோதனையை 48 மணி நேரத்துக்கும் குறைவான காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

வருகையில் அன்டிஜன் சோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று பிரான்ஸ் தூதரக இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயிரிழந்த உறவினரின் உடலை காண்பிக்கக் கோரி பிணவறைக்கு அருகில் அச்சுறுத்தலில் ஈடுபட்ட நபர்

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த தனது உறவினரின் உடலை பார்க்க வேண்டும் எனக் கூறிமருத்துவர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்களை அச்சுறுத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். களுத்துறை வைத்தியசாலையின் பிணவறைக்கு அருகில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. களுத்துறை வைத்தியசாலையின் பிணவறையில் அதிகளவான சடலங்கள் குவிந்து கிடந்துள்ளன.

சம்பந்தப்பட்ட நபர், தனது உறவினரின் உடலை பார்க்க வேண்டும் எனக் கூறி, சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோரை அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமையை அடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவைச் சமாளிக்க முடியவில்லை: நாட்டை ஒரு மாதத்துக்கு உடன் முடக்குங்கள்

## அரசிடம் சுகாதார அதிகாரிகள் அவசர கோரிக்கை

**இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்குக் குறைந்த பட்சம் நான்கு வாரங்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை விதிக்குமாறு சுகாதார அதிகாரிகள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**இது தொடர்பில் சுகாதாரத்துறை தகவல்கள் தெரிவிக்கையில்,**

**கொரோனா நோயாளிகளின் அதிகரிப்பு மற்றும் கொரோனா தொடர்பான இறப்புகள் காரணமாக ஊரடங்கு உத்தரவை விதிப்பது அவசியம். நாட்டின் தற்போதைய நிலைமையை சுகாதாரத் துறையினரால் சமாளிக்க முடியவில்லை.**

கொரோனா நோயாளிகளின் நாளாந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 ஆயிரத்தை எட்டியுள்ள அதேவேளை, இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 100 ஐ எட்டியுள்ளது. அதேபோல், கடந்த 13 நாள்களில் கொரோனா சாவுண்ணிக்கை சுமார் ஆயிரத்தை எட்டியுள்ளது.

மருத்துவமனைகளின் பிரேத அறைகள் கொரோனவால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களால் நிரம்பி வழிகின்றன. அதே நேரத்தில் மருத்துவமனைகளின் பொது வார்டுகளிலும் கொரோனா நோயாளிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கொரோனா நோயாளிகளின் தொடர்ச்சியான அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நிலைமையைக் குறைக்கவும் தொற்று விகிதத்தைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டும் - என்று சுகாதார அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாகாணப் பயணக் கட்டுப்பாடு மறு அறிவித்தல் வரை நீடிப்பு

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



மாகாணப் பயணக் கட்டுப்பாடு மறு அறிவித்தல் வரை தொடரும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 107 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை மொத்தமாக 53 ஆயிரத்து 804 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் வெளியிட்டுள்ள நாளாந்த பொலிஸ் அறிவிப்புகளைத் தெரிவிக்கும் காணொளிப் பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச அழுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிதி அமைச்சர் பஸிலுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கப்போவதாக ஊடகங்களில் வந்த செய்திகளையொட்டி சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஊடகங்களின் வாயிலாக சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அவர் தனது கேள்விகளை முன்வைத்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சிங்கள, பௌத்த நாடென்று ஜனாதிபதியும் அரசும் கூறிவருகின்ற நிலையில் எவ்வாறான பேச்சு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் நடத்தப்போகின்றது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாக இருந்த முன்னைய அரசில் நான்கு வருடங்கள் முயற்சித்தும் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியவில்லை.

ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வடக்கு-கிழக்கு இணைப்பை வற்புறுத்துவதைக் கைவிட்டார்கள்.

வடக்கு - கிழக்கில் பௌத்தத்திற்கு முதலிடம் என்பதை ஏற்றுக்கொண்டார்கள். ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்றார்கள்.

இவ்வளவையும் விட்டுக்கொடுத்தும் கூட ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதிலிருந்து இவர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்காளியாக இருந்த அரசே இவர்களை ஏமாற்றியிருக்கக்கூடியக் சூழ்நிலையில், சிங்கள பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்காகவே வந்துள்ள புதிய அரசிடம் என்ன விதமான புதிய அரசமைப்பைக் கூட்டமைப்பினர் எதிர்பார்க்கின்றார்கள்?

தற்போதைய அரசின் கீழ் வடக்கு - கிழக்கில் நாளாந்தம் புதிது புதிதாக தமிழ் மக்களின் காணிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் இருக்கின்ற புராதன சின்னங்கள் அனைத்தும் சிங்கள பௌத்த சின்னங்களாக முத்திரை குத்தப்படுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ள இன்றைய அரசு தயாராக இல்லை.

ஐ.நா தீர்மானங்கள் அனைத்தும் குப்பையில் வீசப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் தமிழர்களின் இருப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்களே தொடர்ந்தும் பறிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வளவற்றையும் செய்யும் அரசிடம் முதலில் இவை அனைத்தையும் நிறுத்துமாறு கோருவதற்கு கூட்டமைப்பு எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் இந்தச் சூழ்நிலையின் ஆபத்தைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் - என்றுள்ளது.

## 2, 904 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 இலட்சத்து 35 ஆயிரத்து 851 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 644 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 98 ஆயிரத்து 162 ஆக உயர்வடைந்துள்ளது.

### ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்

# எந்த நேரத்திலும் புதிதாக அதிரடி கட்டுப்பாடுகள்?



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து, மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான பயணக் கட்டுப்பாடுகள் நேற்றோ (10) அல்லது இன்றோ (11) விதிக்கப்படலாம் என என்று 'டெய்லிமிரர்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய பயணக் கட்டுப்பாடுகள் அல்லது ஊரடங்கு உத்தரவு குறித்த முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளிகளின் சடுதியான அதிகரிப்பு மற்றும் அதிகரித்து வரும் இறப்புகள் காரணமாக நாட்டின் சுகாதாரப் பிரிவு வீழ்ச்சியின் விளிம்பில் இருப்பதால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவை விதிக்குமாறு சுகாதார நிபுணர்கள் கடும் நெருக்கடியை நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி டெல்டா வைரஸ் வகையால் ஏற்பட்டுள்ளது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உடனடியாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இறப்பு எண்ணிக்கை ஒரு நாளைக்கு 200ஐத் தாண்டும் என்றும், தினமும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளிகள் கண்டறியப்படுவார்கள் என்றும் மருத்துவர்கள் கணித்துள்ளனர்.

# ரிஷாத் பதியுதீனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான வழக்கு முடியும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் விசாரிக்கப்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்காக கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக வாக்குமூலங்கள் பெறப்பட்டு வரும் நிலையில், கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று அவர் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து வந்த நபர் கட்டாய தனிமைப்படுத்தலில்!

**(ந.லோகதயாளன்)**

கொரோனாப் பரவலுக்கு மத்தியில் இந்தியாவிலிருந்து திருட்டுத்தனமாக படகு மூலம் யாழ்ப்பாணம் திரும்பிய நபர் சுகாதார வைத்திய அதிகாரியால் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவின் அகதி முகாமில் தங்கியிருந்த குறித்த நபர், கடந்த 8ஆம் திகதி இரவு படகு மூலம் மன்னாரில் வந்து இறங்கி அங்கிருந்து யாழ். குருநகரில் உள்ள வீட்டுக்கு வந் துள்ளார்.

இந்நிலையில், நேற்று பொதுச் சுகாதார உத்தியோகத்தருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் தற்போது அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.




# கொழும்புத்துறை கடலில் நீராட சென்றவர் சடலமாக கண்டெடுப்பு!

கொழும்புத்துறை உதயபுரம் கடலுக்கு நீராடச் சென்ற முதியவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 5.30 மணியளவில் கடலுக்கு நீராடச் சென்ற இவர், நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில், காலை 8.30 மணியளவில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த மனுவேல் செபஸ்டியன் என்ற 65 வயதான முதியவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# இறுதி முயற்சியாகவே நாட்டை முடக்குவது!

## கெஹலிய கூறுகிறார்



நாட்டை முழுமையாக முடக்குவது என்பது எடுக்கப்படும் தீர்மானங்களின் இறுதி தெரிவாகவே அமையும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டார்.

முழுமையாக ஊரடங்கை பிறப்பிக்க அரசாங்கத்திடம் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் மிகவும் அத்தியாவசிய நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படும் என கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2021 இல் வெளியிடப்பெற்றது.